TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

மார்ச் 2026

தீபம் 14 சுடர் 10

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து **இறையாசீர்**

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

## செவிமடுப்போம், நோன்பிருப்போம், மனமாற்றமடைவோம்



# தவக்காலச் செய்தி

(திருத்தந்தை லியோ XIV அவர்களின்
2026 நோன்புக்காலச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு)

## 1. நோன்புக் காலம் - மனமாற்றத்தின் பள்ளிக்கூடம்

பிரியமான குழந்தைகளே, இளைஞர்களே, அன்பான பெற்றோர்களே,

நோன்பு காலம் என்பது வெறும் "சாப்பாடு குறைப்பது" அல்ல. **அது மனமாற்றம் பெறும் ஒரு ஆன்மிகப் பயணம்.**

திருத்தந்தை லியோ XIV அவர்கள் தனது 2026 நோன்புக்காலச் செய்தியில் கூறுகிறார்: "ஒவ்வொரு மாற்றமும் கடவுளின் வார்த்தையை கேட்பதிலிருந்து ஆரம்பிக்கிறது." அதாவது...

நாம் செவிமடுத்து கேட்கத் தெரிந்தால், கடவுளின் வார்த்தையை மனமுவந்து ஏற்றுக்கொண்டால், நம் வாழ்க்கை மாறும்.

"உன் வார்த்தை என் பாதைக்கு விளக்கும், என் வழிக்கு ஒளியும் அதுவே" (திபா. 119:105)

## 2. செவிமடுத்துக் கேட்போம் - கடவுளின் குரல் எங்கே?

"எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமைகளாக வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன்." (வி.ப. 3:7)

நம் கடவுள் செவிமடுத்து நம் குரலை கேட்கும் கடவுள். அவரது இதயம் ஏழைகளின் அழுகையை இரக்கத்தோடு கேட்கும்.

**குழந்தைகளே:**

- அம்மா, அப்பா பேசும்போது கவனமாக செவிகொடுத்துக் கேளுங்கள்.
- ஆசிரியர் சொல்லும் நல்லவற்றை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுங்கள்.
- நண்பன் சோகமாக இருந்தால், அவனிடம் பேசுங்கள், அவன் சொல்வதை கேளுங்கள்.

### இளைஞர்களே:

- சமூக வலைத்தளங்களில் வரும் எல்லாவற்றையும் நம்ப வேண்டாம்.
- தினமும் குறைந்தது 10 நிமிடம் இறைவார்த்தையை வாசித்து அமைதியாக தியானியுங்கள்.
- வீட்டில் பெற்றோரின் குரலையும், உங்கள் உள்ளத்தின் குரலையும் கேளுங்கள்.

### பெற்றோர்களே:

- உங்கள் குழந்தைகளின் மனஅழுத்தங்களை கவனமாக செவிகொடுத்துக் கேளுங்கள்.
- மற்றவர்மீது குற்றம் சாட்டாமல் பேசுங்கள்.
- குடும்ப ஜெபத்திற்கான நேரத்தை உருவாக்குங்கள். குடும்பமாக ஒன்று சேர்ந்து செபியுங்கள், செபமாலை சொல்லுங்கள், பக்திப் பாடல்கள் பாடுங்கள், தியானியுங்கள்.

**செவிமடுத்துக்கேட்பது - அன்பின் முதல் அடையாளம்.**
**உடலிலும் உள்ளத்திலும் நோன்பு**

## 3. நோன்பு - உடலையும், உள்ளத்தையும் பக்குவப்படுத்தும்

திருத்தந்தை லியோ XIV அவர்கள் சொல்கிறார்:
"நோன்பு என்பது கடவுளின் வார்த்தையை ஏற்க நம்மைத் தயார்ப்படுத்தும் வழி"

நோன்பு என்றால்:

- கோபத்தைக் குறைத்து உறவை வளர்த்தல்
- கெட்ட வார்த்தைகளை, தடித்த வார்த்தைகளை பேசுவதை தவிர்த்து, இனிய நல்ல வார்த்தைகளை பேசுதல்
- சமூக வலைத்தள பயன்பாட்டை கட்டுப்படுத்தி பிறரோடு உறையாடுதல்

### இயேசு சொல்கிறார்:

"மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் என மறைநூலில் எழுதியுள்ளதே" என்றார். (மத்தேயு 4:4)

### இந்த மார்ச் மாதத்தில்

- வாரத்தில் ஒரு நாள் ஒருவேளை உணவைத் தவிர்த்து பசித்தோருக்கு உணவளிக்கலாம்.
- தினமும் 15 நிமிடம் இறைவார்த்தையை வாசித்து, பிறருக்கு எடுத்துரைக்கலாம்.
- ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒருவகையில் தேவையுள்ளோருக்கு உதவி செய்யலாம்.
- இத்தவக்காலத்தில் யவரேனும் ஒருவருக்கு உதவி செய்யாமல் இரவு தூங்கச் செல்லக் கூடாது.



## 4. வார்த்தைகளில் நோன்பு - மிக முக்கியமானது

திருத்தந்தை லியோ XIV மிகவும் அழகாக அழைக்கிறார்: "மற்றவர்களின் மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளிலிருந்து விலகுவோம்"

இது நமக்கு இன்று எல்லோரோடும் உறவுக்கொள்ள மிகவும் தேவையான நோன்பு!

**நாம் சிந்திக்க வேண்டிய கேள்விகள்:**

- நான் கெட்ட வார்த்தைகள், தடித்த வார்த்தைகள், தீய வார்த்தைகளை பேசுகிறேனா?
- நான் யாரையாவது பின்னால் குறை சொல்கிறேனா? புரணி பேசுகிறேனா?
- நான் சமூக வலைத்தளத்தில் வெறுப்பை உண்டாக்கும் செய்தியை பகிர்கிறேனா? பகையை வளர்க்கின்றேனா?

"கெட்ட வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும்படி, தேவைக்கேற்றவாறு, அருள்வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்." (எபேசியர் 4:29)

**குடும்ப உறுதி:**
**இம்மாதத்தில்**

- நாங்கள் கோப வார்த்தைகள் தவிர்த்து, மாறாக அன்பான வார்த்தைகளைப் பேசுவோம்.
- நாங்கள் இழிவான கருத்துகள் சொல்வதை தவிர்த்து, பிறரைப்பற்றி உயர்வாக பெருமையாகப் பேசுவோம்.
- நாங்கள் எப்பொழுதும் பிறரை ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் மட்டுமே பயன்படுத்துவோம்.

## 5. ஒன்றாக நோன்பு - குடும்பமும், சமூகமும்

"சாக்கு உடை அணிந்து, புழுதியைத் தங்கள்மேல் பூசிக் கொண்டு நோன்பிருக்குமாறு அம்மாதத்தின் இருபத்து நான்காம் நாளன்று மக்கள் ஒன்று கூட்டப்பட்டனர். இஸ்ரயேல் இனத்தார் வேற்றினத்தாரிடமிருந்து பிரிந்து நின்றனர். எழுந்து நின்று தங்கள் பாவங்களையும், தங்கள் முன்னோரின் குற்றங்களையும் அறிக்கையிட்டனர். ஒவ்வொரு நாளும் பகலில் கால் பகுதியைத் தங்கள் இடத்திலேயே எழுந்து நின்று கடவுளாகிய ஆண்டவரின் திருச்சட்டநூலை வாசிப்பதிலும், மற்றொரு கால் பகுதியைத் தங்கள் பாவங்களை அறிக்கையிடுவதிலும், தங்கள் கடவுளாகிய ஆண்டவரைத் தொழுவதிலும் செலவழித்தனர். (நெகேமியா 9:1-3)

அதேபோல்,

- ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து செபிப்பதும்,
- ஒரு பங்காக ஒன்றிணைந்து திருப்பலியில் பங்கேற்று கொண்டாடுவதும்,
- இளைஞர்கள் ஒரு குழுவாக இறைவார்த்தையை வாசிப்பதும், தியானிப்பதும், நாம் செய்யும் நோன்பாகும்.
- ஒரு சமூகத்திற்கான மாற்றத்தையும், தனி மனிதனுக்கான மாற்றத்தையும் கண்டு நம்மை கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கும் காலம் இத்தவக்காலம்.

**நோன்பு = தனிப்பட்ட மாற்றம் + சமூக மாற்றம்**

## 6. நாம் உருவாக்க வேண்டிய உலகம்

திருத்தந்தை லியோ XIV அவர்கள் நமக்கு ஒரு அழைப்பு விடுக்கிறார்:

- அன்பின் நாகரிகம் கட்டவும்
- அமைதியின் வார்த்தைகள் பேசவும்
- நீதிக்காக பசியுடன் காத்திருக்கவும்

"நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் நிறைவுபெறுவர்". (மத்தேயு 5:6)

**மார்ச் மாத தீர்மானம்**

**குழந்தை:**
நான் தினமும் 5 நிமிடம் இயேசுவுடன் பேசுவேன்

**இளைஞர்:**
நான் பிறரிடம் பேசும்போது வார்த்தைகளில் கவனம் கொள்வேன்

**பெற்றோர்:**
என் குடும்பத்திற்கான ஜெப நேரத்தை உருவாக்குவேன்

### இறுதி ஜெபம்

"எனக்கு கேட்கும் இதயம் தாரும் ஆண்டவரே,எனக்கு சுத்தமான வார்த்தைகள் பேசும் நாவைத் தாரும்,நோன்பின் மூலம் மனமாற்றமடையும் மனதைத் தாரும்.எங்கள் குடும்பங்கள் அன்பின், சமாதானத்தின், ஒற்றுமையின், இல்லமாக மாறட்டும். ஆமென்."

**இந்நோன்பு காலத்தில் - இறைவார்த்தையை செவிமடுத்துக் கேட்போம், நோன்பிருப்போம், மனமாற்றமடைவோம்!**



என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.03.2026 | தவக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி | 08 |
| 04.03.2026 | புனித கசிமீர் - திருப்பலி | 07 |
| 07.03.2026 | புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி-திருப்பலி | 11 |
| 08.03.2026 | தவக்காலத்தின் 3ம் ஞாயிறு - திருப்பலி | 12 |
| 09.03.2026 | உரோமை நகர்ப்புனித பிரான்சிஸ் - திருப்பலி | 14 |
| 15.03.2026 | தவக்காலத்தின் 4ம் ஞாயிறு - திருப்பலி | 15 |
| 17.03.2026 | புனித பேட்ரிக் - திருப்பலி | 16 |
| 19.03.2026 | புனித யோசேப்பு புனித கன்னிமரியாவின் கணவர் பெருவிழா- திருப்பலி | 18 |
| 22.03.2026 | தவக்காலத்தின் 5ம் ஞாயிறு - திருப்பலி | 19 |
| 25.03.2026 | ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெருவிழா - திருப்பலி | 20 |
| 29.03.2026 | ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு - திருப்பலி | 22 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| சிலுவைப் பாதை - 1 | 25 |
| சிலுவைப் பாதை -2 | 31 |
| கன்னிமரியாவின் கணவர் புனித யோசேப்பு வாழ்க்கை வரலாறு | 41 |
| குருத்து ஞாயிறு தரும் செய்தி என்ன? | 44 |
| திருஅவைச் செய்திகள் | 48 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# தவக்காலம் இரண்டாம் ஞாயிறு

திருப்பலி
01.03.2026

## முன்னுரை

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *தொ.நூ. 12: 1-4* II. *2திமொ. 1: 8-10* *மத். 17: 1-9*

இயேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர்களே, தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள். இன்றைய முதல் வாசகப்பகுதியானது "நம்பிக்கையின் தந்தை" என்று அழைக்கப்படும் ஆபிரகாமின் அழைப்பினை விளக்குகிறது. கடவுள் இவரை அழைப்பதன் வழியாக மீட்பின் வரலாறு துவங்குகிறது. இறைவனின் அழைப்பை ஏற்றதனால் கானான் நாட்டை உரிமையாக்கிக்கொள்கிறார். இவருடைய இனம் மிகப்பெரிய இனமாக மாறுகிறது. கடவுளின் அருள் இவரின்மூலம் நம் அனைவர்மீதும் பொழியப்படுகிறது.

இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் சிறையில் துன்பத்தின் மத்தியில் வேதனைப்பட்ட நிலையில் திமொத்தேயுவுக்கு எழுதிய கடிதம் இது. வாழ்வில் வரும் துன்ப துயரங்களைக் கண்டு மனங்கலங்காமல் தங்களுடைய நம்பிக்கையில் உறுதியடையும்படியும், கிறிஸ்துவில் வாழும்படியும் கேட்டுக்கொள்கிறார்.

நற்செய்தியில் இயேசுவின் உருமாற்ற நிகழ்வுகளைப்பற்றி படிக்கிறோம். புனித பேதுரு இயேசுவின் உருமாற்றத்தின்போது கடவுளின் மாட்சியைக்கண்டு "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது" என்றார். இயேசு சிலுவையில் பாடுபடப்போவதாகக் கூறியபோது, பாடுகள் வேண்டாம், மரணமும் வேண்டாம் என்று கூறியவர், இப்போது "நாம் இங்கேயே தங்கிவிடுவோம்" என்று பேதுரு கூறுகிறார். இயேசு கிறிஸ்து தன் வாழ்வில் ஒரு சராசரி மனிதனாக துன்ப, துயரங்களை அனுபவித்தார். இதனால்தான் பேதுருவின் வார்த்தைகள் சோதனையாய் அமைந்தன. தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றவே இறைமகன் இவ்வுலகத்திற்கு வந்தார். இயேசு தன் வாழ்நாள் முழுவதும் செபவாழ்வு வாழ்ந்து வந்தார். தந்தையிடம் கொண்டிருந்த செபஉறவு அவரை புதுமைகள் பல புரிய வைத்தன.

முதல் வாசகத்தில் குறிப்பிடப்பட்டதுபோல இறைவன்மீது ஆபிரகாம் கொண்டிருந்த நம்பிக்கை உறவு எல்லா சோதனைகளையும் தாங்கும் சக்தியைத் தந்தது. நம் வாழ்வின் துன்ப துயரங்களை எதிர்கொள்ள, செபவாழ்வு வாழ நமது திருஅவை 40 நாட்கள் தவக்காலத்தைத் தந்துள்ளது. இயேசு உருமாறினார் என்பதைவிட தன் இலக்கு நோக்கியப் பயணத்தில் வெற்றிக்கொண்டார். அவரைப்போன்று நாமும் நம் வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்களை உறுதியான மனதோடு, இயேசுவின்மீது ஆழ்ந்த நம்பிக்கொண்டவர்களாக வாழ இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. "என் அன்பார்ந்த மைந்தன் இவரே" என்று கூறிய இறைவா, திருஅவையை வழிநடத்த உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரையும் உம்பதம் சமர்ப்பித்து வேண்டுகிறோம். தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு பணியிலும் பயணத்திலும் ஏற்படும் அனைத்துவிதமான துன்ப துயரங்களையும் மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டு மனந்தளராமல் வெற்றியோடு உமது பயணத்தில் வழிநடந்திட தூய ஆவியாரின் துணையை அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இயேசுவின் உருமாற்ற நிகழ்வைத் தியானிக்கும் நாங்கள், எங்கள் வாழ்வில் மனமாற்றம் பெற்று உம் பணி செய்யவும், உம் வழி நடக்கவும் உம்மில் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நாட்டையும், மக்களையும் ஆளுமைக்கொண்ட இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்கள், அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் அனைவரும் அன்பை அடித்தளமாகக்கொண்டு உண்மையையும், நீதியையும் உள்ளத்தில் நிறுத்தி சுதந்திர உணர்வோடு என்றும் மக்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆபிரகாம் ஆண்டவர்மீது நம்பிக்கைக்கொண்டார், அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார் என்ற இறைவார்த்தைக்கேற்ப இந்த தவக்காலத்தில் நாங்கள் எங்கள் உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் புதுப்பித்து இயேசுவின் சீடர்களாக அகமாற்றம் பெற்று புதிய மனிதர்களாக வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்றவரே, எம் பங்கிலுள்ள இளைஞர், இளம்பெண்கள், சிறுவர், சிறுமியர், குழந்தைகள் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் கல்வியறிவிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கவும், அவர்களை நீரே பாதுகாத்து அரவணைத்து எவ்வித தீங்கும் நேராதபடிக்கு உமது நிழலில் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# புனித கசிமீர்

திருப்பலி
04.03.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

மனிதன் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழப்பாரெனில் அதனால் வரும் பயனென்ன? என்ற இறை வார்த்தைக்கேற்ப வாழ்ந்து மரித்தவரின் நினைவு நாளை சிறப்பிக்க ஒன்றுக்

கூடியுள்ளோம். இவர் போலந்து நாட்டு மன்னர் நான்காம் கசிமீர் என்பவருக்கு 1458ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ம் நாள் பிறந்தார். சிறுவயதிலேயே மிகுந்த பக்தியோடு வளர்ந்து வந்த கசிமீர் என்பவரிடம் பாடங்களை கற்றுத் தேர்ந்தார். இச்சமயத்தில் துருக்கி நாட்டவரால் ஹங்கேரி நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதனால் ஹங்கேரி நாட்டு மக்கள் மன்னர் நான்காம் கசிமீரிடம் உதவிக் கேட்டனர். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மன்னர் தன் மகன் கசிமீரை தலைமைத் தாங்க பணித்தார். சில ஆண்டுகள் கசிமீர் ஹங்கேரியின் தலைமைப் பொறுப்பை ஏற்று சீரும் சிறப்புமாக மக்களை வழிநடத்தி வந்தார். அப்பொழுது அவருக்கு வயது 13. சிறுவயதிலேயே ஒரு நாட்டை தலைமைத் தாங்கி வழிநடத்தக்கூடிய திறமையை இறைவன் அவருக்கு கொடுத்திருந்தார். சில ஆண்டுகள் பணியாற்றிவிட்டு தன் சொந்த நாட்டிற்கு திரும்பினார்.

போலந்து நாட்டிற்கு வந்த சமயம் லித்துவேனியாவில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அரசர் தன் பதவியை கசிமீரிடம் கொடுத்துவிட்டு அங்கு சென்றார். திருமணத்தின்மீது பற்றில்லாத கசிமீர், ஆண்டவருக்கு தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்து வாழத் தொடங்கினார். கசிமீர் செப வாழ்க்கையில் மேலோங்கி விளங்கினார். "தினமும் வாழ்த்துவோம், ஓ அன்னையே" என்ற பாடலை அவர் எப்போதும் பாடி செபித்துக்கொண்டே இருந்தார். சில நேரங்களில் அவர் இரவில் தூங்காமல் செபித்து வந்தார். இப்படி இறைவனுக்குகந்த வாழ்க்கை வாழ்ந்து வந்த கசிமீர் மிகக் குறைந்த வயதிலே அதாவது 24 வயதிலேயே இறைவனடி சேர்ந்தார்.

கசிமீர் இறந்து 122 ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய கல்லறையைத் தோண்டி பார்த்தபோது அவருடைய உடல் அழியாது இருப்பது கண்டு மக்களெல்லாம் ஆச்சரியப்பட்டு நின்றார்கள். அவர் தன்னோடு வைத்திருந்த செபப் புத்தகம் கூட அழியாமல் இருந்தது. இப்புனிதரைப் போன்றே நாமும் கற்புநெறியிலும், ஏழை எளியவர்களை அன்பு செய்வதிலும், நற்செய்தியைப் பரப்புவதிலும், கன்னிமரியாள்மீது பற்றுதலும் கொண்டுவாழ்வோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வழிகாட்டும் எம் இறைவா, உம் குரலுக்கு செவிசாய்த்து, உமது பாதையில் நடக்கவும், உமது நியமங்களையும், கட்டளைகளையும் முறையாக கடைப்பிடித்து செயல்படும் அனைத்து திருஅவைத் தலைவர்களையும் நீரே பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வளிக்கும் வள்ளலே எம் தலைவா, மாறிவரும் இயற்கை சூழலின் காரணமாக அதிகரித்து வரும் பேரழிவுகளிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் ஊற்றும் உயிருமானவரே, இன்றைய இளைய தலைமுறையினரை உம் பதம் படைக்கின்றோம். தாங்கள் செல்கின்றன பாதை கரடு முரடானவை என்பதை அறியாமல் செல்கின்றனர். அவர்களின் பாதையைச் செம்மைப்படுத்தி உமக்கேற்ற வழியில் நடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி

திருப்பலி
07.03.2026

**முன்னுரை**

*திருமதி. டிலைலா சேவியர்*

இவர் உரோமை நகரில் செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் தோன்றியவர். இளநங்கையாயிருக்கும்போது துறவறத்தின்மீது மிகுந்த ஆர்வம் காட்டினார். ஆனால் இவரின் பெற்றோர்கள் இவருக்கு மணமுடைத்து வைத்தனர். 40 ஆண்டு குடும்ப வாழ்க்கையில் இவர்தம் கணவருக்கும் இவருக்குமிடையே இறையமைதி குடிக்கொண்டிருந்தது. இறைவனின்மீது ஆழ்ந்த பக்திக்கொண்ட இப்புனிதை அவர் பெயரால் ஏழை எளியோருக்குப் பணிவிடை புரிவதில் தம் நாட்களை செலவழித்தார். கடுமையான பஞ்சம் நிலவிய நாட்களில் தன்னுடைய நகைகளை விற்று ஏழைகளுக்குப் பணியாற்றத் தயங்கவில்லை. பஞ்சம் நிலவிய நாட்களில் "பிளேக்" என்ற கொடிய தொற்றுநோயும் பலரின் உயிரைக் குடித்தது. இறந்த பலரில் புனிதவதியின் இரண்டாம் மகனும் ஒருவராவார்.

இந்த இக்கட்டான வேளையிலும், தமது உறவினரான வனோஜாவையும் அழைத்துக்கொண்டு வீடு வீடாகச்சென்று, ஏழைகளுக்காகத் உதவிகள் பெற்று, அவர்களைப் பாதுகாத்து வந்தார். அப்போது ஓர் அம்பு அவரைக் குத்தியது. அவரது ஒரே மகளும் கொள்ளை நோய்க்குப் பலியானார். இந்தத் தாக்குதலுக்குப்பின், தம் வீட்டின் ஒரு பகுதியையே ஏழைகளுக்கு மருத்துவ விடுதியாக மாற்றினார். தான் அன்றைய உலகுக்கு இன்றியமையாதது என்று மேலும் மேலும் உணர்ந்தார். அவரது விருப்பத்தை ஏற்று நடக்க விருப்பம் கொண்ட பல பெண்களை ஒன்றாய் திரட்டி துறவறவார்த்தைப் பாடில்லா ஒரு சபையை உருவாக்கினார். இவர்கள் மனப்பூர்வமாக இறைவனுக்கு தங்களையே கையளித்து ஏழைகளுக்கு பல விதத்தில் தொண்டு செய்தனர். தன் பணியை மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு தன் குடும்பத்திற்கு சென்று தன் கணவன் இறக்கும்வரை பணிவிடை செய்து, அவர் இறந்தபின் மீண்டும் இந்தச் சபையினரோடு சேர்ந்து பணியாற்றி வந்தார். காவல்சம்மனசு மீது இவருக்கு அதிக பக்தியுண்டு. துன்பம் நேரும் நேரத்தில் வானத்தூதர் இவரைப் பார்க்கும் வரத்தை கடவுள் இவருக்களித்தார். பெரியவர், சிறியவர், துறவறத்தார், இல்லறத்தார் ஆகிய அனைவருமே புனிதராகலாம் என்ற பேருண்மையை இவரின் வாழ்க்கை வரலாறு நமக்கு தெளிவாக காட்டியுள்ளது. இவரின் ஆழ்ந்த நம்பிக்கையைப் பின்பற்றி நாமும் நம்வாழ்வில் கடைப்பிடித்து வாழ இறையருளைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் உமது கனிவிரக்கத்தால் நல்ல ஆன்ம உடல் சுகமும், திருஅவையை வழிநடத்த வேண்டிய ஆற்றலையும் தூய ஆவியின் வழியாய் பெற்று இறுதிவரை இறைப்பணி செய்யும் வரம்பெற உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, இன்றைய காலகட்டத்தில் உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவியும், ஆறுதல் தேவைப்படுபவர்களுக்கு ஆறுதலும், தன்னலம் கருதாமல் பிறருக்கு உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் சமுதாயத்தில் உருவாக வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இவ்வருடம் அரசாங்க தேர்வு எழுதப்போகும் பத்தாம், பனிரெண்டாம் வகுப்பில் படிக்கும் மாணவ, மாணவிகள் அனைவரும் நன்றாகப் படிக்கவும், படிக்கும் சூழ்நிலையை உருவாக்கவும், தேர்வினை சிறப்பாக எழுதி, நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிப்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# தவக்காலத்தின் 3ம் ஞாயிறு

திருப்பலி
08.03.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *விப. 17 : 3-7* II. *உரோ. 5: 1-2, 5-8* *யோ. 4: 5-42*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இறைப்படைப்பில் வாழும் அனைத்து உயிரினத்திற்கும் தண்ணீர் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. தண்ணீருக்கென்று எந்த ஒரு நிறமோ, மணமோ, குணமோ, உருவமோ இல்லை. அது எங்கே செல்கின்றதோ, எதனுடன் கலக்கின்றதோ அந்த மணத்தையும், குணத்தையும், உருவத்தையும், சுவையையும் ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்கின்றது. அதனால்தான் இறைவனோடு கலந்து இறைச்சாயலைப் பெற்றுக்கொள்ள நம் சென்மப் பாவத்தை போக்க தண்ணீரால் திருமுழுக்கு அளிக்கப்பட்டு இறையரசுக்கு நம்மை தகுதிப்பெற நீர் பயன்படுத்தப்படுகின்றது.

இன்றைய வாசகத்தில் இரண்டுவிதமான தண்ணீரை நாம் காண்கின்றோம். முதல் வாசகத்தில் மோசேவினால் வழிநடத்தப்பட்ட இஸ்ரயேல் மக்கள் பாலைநிலத்தில் தாகத்தால் தவித்தபோது வழிநடத்துநர் நம் இறைவன் என்பதை மறந்து, நம்பிக்கையற்று தாம் இறந்துபோவோம் என்ற அச்சத்தால் முணுமுணுத்தனர். அந்நேரம் தாகத்தைத் தணிக்க இறைவனால் தண்ணீர் அளிக்கப்பட்டது. மற்றொன்று நம் ஆன்மாவிற்கு உயிரைத் தரவல்ல

உயிருள்ள தண்ணீர் அதை நாம் உட்கொண்டால் விண்ணக வீட்டிற்கு ஏற்புடையவர்களாக முடியும் என்பதை விளக்குகின்றது. அந்த உயிருள்ள நீர் இறையேசுவால் நமக்கு அளிக்கப்பட்ட முடிவில்லா வாழ்வுக்கு நம்மை தயாரிக்க வல்லது. இறைமகன் இயேசுவின் வார்த்தை அன்று சமாரியப் பெண்ணின் உள்ளத்தை ஊடுருவி இயேசுதான் இறைமகன் மெசியா என அறிக்கையிட சான்று பகரத் தூண்டியது. அப்பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கைக் கொண்டனர். உலகின் மீட்பர் என அறிந்துக்கொண்டனர். நாமும் இறைவார்த்தைக்கு செவிமடுத்து வாழ்வில் மாசற்ற உயிருள்ள தண்ணீரால் கழுவப்பட்டு புனித வாழ்வைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் பக்தியோடு பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கடவுளோடு நல்லுறவு கொள்ள இயேசு கிறிஸ்துவின் வழியாக நம்மை வழிநடத்திச் செல்லும் நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நோக்கத்தை உணர்ந்தவர்களாகவும், தங்களின் பணியினை கடமையுணர்வோடு தம் மந்தையை பேணிகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தண்ணீரால் உலகை இனி அழிக்க மாட்டேன் என்று வாக்களித்தவரே எம் இறைவா, நாம் வாழும் உலகில் குடிக்க நல்ல குடிநீர் இல்லாமல் எத்தனையோ நாட்டில் பஞ்சம், பட்டினி, பசியினால் மக்கள் வாடுகின்றார்கள். இந்நிலைமாறி அவர்களுக்கு உமது உயிருள்ள ஊற்றை அவர்களுக்கு அளித்து, உமது மகத்துவத்தை வாழ்நாள் முழுவதும் போற்றவும், துதிக்கவும் அவர்களுக்குத் தேவையான நல்ல உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிகாட்டுதலின் ஊற்றே எம் இறைவா, அன்று இஸ்ரயேல் மக்களை வழிநடத்த நீர் தேர்ந்தெடுத்ததைப்போன்று, இன்று நாட்டையாள நல்லதொரு தலைவரை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்றும், வழிதவறி செல்லும் உம் மக்களை மீண்டுமாய் உமது பாதையில் நாளும் உம்வழி நடந்திட அவர்களுக்குத் தேவையான ஆற்றலையும் சக்தியையும் அளித்து எவ்விதமான தீங்கும் நேர்ந்திடாமல் பாதுகாத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, நாட்டின் எதிர்காலம் இளையோர் கையில் உள்ளது. எம் இளையோர்கள் உம்மீது நம்பிக்கைக் கொண்டவர்களாய் வாழவும், இறைப்பற்றின்றி வலுவற்ற உலகப்பிரகாசமான வாழ்வுக்கு அடிமையாகாமல் தூய ஆவியாரின் துணைக்கொண்டு எல்லாவிதமான போராட்டங்களையும் எதிர்கொண்டு வெற்றிக்காண தேவையான பலத்தையும் ஆற்றலையும் நிறைவாக ஆசீர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# உரோமை நகர்ப் புனித பிரான்சிஸ்

திருப்பலி
09.03.2026

## முன்னுரை

திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் உரோமை நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவைக் கொண்டாடுகிறோம். சிறுமி பிரான்சிஸ் தனது 11 வயதிலிருந்தே துறவியாக வேண்டுமென்ற எண்ணத்தில் வாழ்ந்து வந்த அவர், தேவ அழைத்தலை உணர்ந்தவராய் தன் தந்தையிடம் தெரிவித்தபோது, அவரது முடிவு நிராகரிக்கப்பட்டு, திருமணம் செய்து வைக்கப்பட்டார். இருப்பினும் இல்லற வாழ்வில் கடமை தவறாமல் வாழ்ந்தாள். தனது கணவரின் இறப்பிற்குப் பின் தனது குடும்பப் பணியில் மேலும் அக்கரையோடு செயல்பட்டார். துறவறத்திற்கு ஒப்பான வாழ்வைக் கடைப்பிடித்து துறவற சபையைத் துவங்கி அதன் வழியில் இறைப்பணியாற்றினார். நம் எண்ணமன்று, கடவுளின் எண்ணமே இறுதியானது என்பதை இப்புனிதையின் வாழ்வில் நாம் அறிந்து கொள்ளலாம். இன்றைய நற்செய்தி வாசகம் நமது பாவ நிலையையும், இறைவனின் இரக்கத்தையும் நன்கு பறைச்சாற்றுகிறது. உண்மையிலே கடவுளின் முன்னிலையில் எல்லா மனிதருமே பாவிகள்தாம். இந்த உணர்வை நம்மில் எழுப்பவும் நாம் நம் வாழ்வை மாற்றியமைக்கவும் இந்த தவக்காலத்தில் உறுதியேற்க தொடர்ந்து திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டிய இறைவா, எம் திருஅவைக்காகவும், திருத்தந்தைக்காகவும் மன்றாடுகிறோம். எதிர்பாராத நிகழ்வுகளைத் தாங்கும் உறுதியான நெஞ்சம் கொண்டிருக்கவும், அத்தகைய சூழலில் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது தம் தந்தைமீது அசைக்க முடியா நம்பிக்கைக் கொண்ட இயேசுவைப் போல வாழ்வை அணுகத் தேவையான ஆற்றலால் இவரை நிரப்பியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்

2. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்றவைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# தவக்காலத்தின் 4ம் ஞாயிறு

திருப்பலி
15.03.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *1சாமு. 16: 1.16-7, 10-13* II. *எபே. 5: 8-14* *யோவா. 9: 1-41*

இறையேசுவில் பிரிமான இறைச்சமூகமே, பாவியாகிய எம்மை மீட்க இறைவன் செய்த அற்புதங்களையும் புதுமைகளையும் இன்றைய திருப்பலியில் வாசித்து தியானிக்க நாம் ஒன்றுக் கூடியுள்ளோம். இன்றைய விஞ்ஞான உலகில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம், நம் கண்முன்பாக பார்த்து அதன்படி வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம், வாழ அதை நோக்கி ஓடுகிறோம். நாம் எதன் பின்னால் ஓடுகிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம். இறைவன் நம்மை படைத்து பாதுகாத்து பராமரித்து வருபவரை ஒருபோதும் நாம் நினைப்பதில்லை. ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆன்மாவை இழக்க நேரிட்டால் அவனுக்கு என்னவாகும் என்று சற்று சிந்தித்துப் பார்த்தோம் என்றால் நாம் செல்லும் பாதை எப்படிப்பட்டது என்பது நமக்குத் தெரியும்.

நம்முடைய பார்வை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவுப்படுத்துகிறது. வறியவரை அன்பு செய்யவும், ஏழையரை உயர்த்தவும், பிறரை மதிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. இறைவன் பார்வையற்ற நபரை குறித்துக் கூறுகிறார். அவர்மீது இரக்கம் கொள்கிறார். ஏனெனில் அவர் தனது இயல்பில் குறைபாடு உடையவர். சூரிய ஒளியில் பனிமறைவதுபோல இயேசுவின் பார்வைப் பட்டதும் அவரின் குறைகள் நீங்கியது. நமது பார்வை யார்மீது செலுத்தப்படுகிறது என்பதைப் பற்றி சிந்திப்போம்.

இறைவன் தனது பிள்ளைகளை ஒருபோதும் விட்டுவிலகியதில்லை. ஆயனில்லா ஆடுகளைப்போல நாம் துன்பத்தில் தவிக்கும்போதும், உணவுக்காக ஏங்கும்போதும், இயற்கைச் சீற்றத்தின்போதும், நோய், கடன்பிரச்சனை போன்ற பல்வேறு இன்னல்களில் நாம் சிக்கித் தவிக்கும்போதும் இறைவன் நம்மை தனது கரங்களால் தொட்டு தூக்கி நம்மை அனைத்துவிதமான துயரங்களிலிருந்து மீட்டு வழிநடத்துகிறார். வாழ்வில் வரும் கஷ்டங்களை நினைத்து வருந்தாமல் இயேசுவின் பார்வையில் அனைத்தையும் ஒப்படைத்துவிட்டு அவரின் நன்மைகளை உணர்ந்தவர்களாக நன்றியுள்ளம் கொண்டவர்களாக நாம் வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்குபெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவரே எம் இறைவா, திருஅவைக்காக அயராது உழைத்துவரும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றுமுள்ள அனைத்து இறைச்சமூகத்தையும்

ஆசீர்வதித்து, உமது நற்செய்திப் பணியினை திறம்பட செயல்படுத்தவும், அதனால் ஏற்படும் தடைகளை உமது கருணையினால் உடைத்தெறிந்து பாதுகாத்து வழிநடத்த இவர்களுக்குத் தேவையான ஆற்றலையும் அருளையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்லாயனாம் எம் இறைவா, நாட்டில் பெருகிவரும் கொள்ளை, கொலை, வன்முறை, பகைமை, மற்றும் போதைக்கு அடிமையாகி தங்களின் வாழ்வையே அழித்துக்கொள்ளும் அவலநிலையை மாற்றி, அனைத்தையும் தைரியத்துடன் ஏற்றுக்கொண்டு அவற்றிலிருந்து விடுதலைப்பெற்று வாழ்வில் மகிழ்ச்சியாக வாழ நம் இறைவனை பற்றிக்கொண்டு வாழும் பரந்த மனதையும், ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் ஊற்றும் ஒளியுமாய் இருந்து செயல்படுபவரே, எம் இளம் தலைமுறையினரை உமக்கு கையளிக்கின்றோம். உலக மாயைகளை நம்பிக்கொண்டு அதன்பின் செல்வதை விடுத்து, தங்களின் குடும்பச் சூழலையும், எதிர்காலத்தின் எதிர்நோக்கையும் கணித்துக்கொண்டு அதற்கான வழிமுறைகளைக் கண்டு அவ்வழியில் நாளும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு இறைவனோடு ஒன்றிணைந்து வாழும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிகாட்டும் நல்தெய்வமே, இன்றைய காலக்கட்டத்தில் தேர்வினை எழுதுவோரையும், எழுத காத்திருப்போரையும் உமது அடைக்கலத்தில் ஒப்படைக்கின்றோம். தாங்கள் எழுதுகின்ற தேர்வினை சரியான நேரத்தில் சரியான பதிலை எழுத அவர்களுக்கு உமது ஞானக்கதிர்களை அவர்கள்மீது ஒளிரச்செய்து வாழ்வில் முன்னேற்றம் கண்டு, குடும்பத்தையும் சமுதாயத்தையும் நல்வழியில் நடத்தியருள தேவையான அருட்கொடைகளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.



## புனித பேட்ரிக்

திருப்பலி
17.03.2026

**முன்னுரை**

*திருமதி. ராணிசம்பந்தன்*

இன்று நம் திருஅவையானது புனித பேட்ரிக் நினைவு நாளை சிறப்பிக்கின்றது. இலத்தீன் ஐரிஷ் குடிமகனான இவர் கி.பி. 387-493 காலங்களில் வாழ்ந்தவர். தன் வீட்டில் இருந்தபோது பதினாறு வயதில் ஐரிஷ் கடற்கொள்ளையர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டு நீண்டதூரம் கப்பலில் கொண்டு செல்லப்பட்டு ஆறு வருடங்களாக ஆடுகளை மேய்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். உறக்கத்தில் அவருக்கு கடவுளின் தூதர் முதல் தடவையாக காட்சியளித்து வீட்டிற்கு தப்பித்து போக கூறினார். புனித பேட்ரிக் ஒரு கப்பல் மாலுமியின் தயவால் தப்பித்து வீடு வந்து சேர்ந்தார்.

வீட்டில் உறங்குகையில் கடவுளின் தூதர் இரண்டாவது முறையாக காட்சியளித்து கடவுள் அழைப்பதாக கூறி சென்றார்.

அதற்குபின் புனித பேட்ரிக் துறவற மடம் சேர்ந்து பயின்று குருப்பட்டம் பெற்று அரிய சேவைகளை செய்து வந்தார். இவரின் சேவையை பாராட்டி அயர்லாந்தின் ஆயராக நியமித்தார். அன்றைய திருத்தந்தை முதலாம் செலஸ்தின் பின் திருத்தந்தை நம் புனிதரை அயர்லாந்து மக்களை மனந்திருப்பும் அரிய சேவையை செய்ய பணித்தார். இதைக் கண்ட அந்நாட்டு அரசன் புனிதரை பிடித்து வர செய்தான். புனிதரும் தன் தோழர்களான புனித பிரிஜித், புனித கொலும்பா ஆகியோருடன் அரசன் முன்னிலையில் நிறுத்தப்பட்டார். புனிதர் பேட்ரிக் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றி அழகாக எடுத்துரைத்தும், ஒரே கடவுள் மூன்று ஆட்களாக இருக்கிறார் என்பதையும் கூறினார். அரசனால் இதைப்புரிந்து கொள்ள இயலாததால் அங்கிருந்த "சாம்ராக்" என்னும் ஒரு சிறு செடியை பரித்து அதன் ஒரே தண்டில் ஒரே இலை 3 பிரிவுகளாக இருப்பதை சுட்டிக்காட்டினார். இதுபோல்தான் கடவுளும் மூன்று ஆட்களாயிருக்கிறார் என்பதையும் விளக்கினார். அரசன் புரிந்துக்கொண்டு தன் மக்களோடு கிறிஸ்துவத்தில் இணைய அயர்லாந்தில் பெரும்பாலோனோர் மனந்திரும்பினர். மக்கள் இவரை அயர்லாந்தின் திருத்தூதர் என அழைத்தனர். இப்புனிதரைப்போலவே, நமக்கும் இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய கடமை உள்ளது என்பதை உணர்ந்து, வாழ்வில் செயல்பட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, திருஅவையின் ஆளுனரான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் நலனுக்காக செயல்படவும், கடமைகளை, கட்டளைகளை, போதனைகளை, உண்மையான வெளிபாடுகளுடன் செயலாற்றவும், உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் இறைவா, இன்றைய சமுதாயத்தின் மிகப் பெரிய அவமானமும், அதிபயங்கரமான அபாய சின்னமுமான "காதல்" என்னும் அரக்கனின் பிடியிலிருந்து எங்களது வாலிப பிள்ளைகளை காப்பாற்றியும், அதன் தோல்வியினால் தற்கொலை என்னும் மாயையில் சிக்கி மாய்ந்து போகாமல், பெற்று வளர்த்த தாய் தந்தையருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தாத அறிவுசார் வாலிப பிள்ளைகளாக வாழ வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா, இப்பூவுலகில் வாழும் அனைத்து மக்களும், கிறிஸ்துவத்தின் மேன்மையையும், சத்தியத்தையும் உணர தன்

செபதப செயல்களாலும், உறுதியான நம்பிக்கையினாலும் தான் வாழ்ந்த அயர்லாந்து நகரத்தையே முழுவதுமாக கிறிஸ்துவத்தை விதைத்த அனைவரும் சத்திய சன்மார்க்கத்தை பின்பற்ற செய்த புனித பேட்ரிக் போன்று அநேக தூயவர்களை உலகிற்கு கையளிக்கும் தாராள உள்ளம் கொண்ட பெற்றோரை ஆசீர்வதிக்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## புனித யோசேப்பு
## புனித கன்னிமரியாவின் கணவர் பெருவிழா

திருப்பலி
19.03.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது தூய யோசேப்பு பெருவிழாவை கொண்டாடுகிறது. மரியாவின் கணவரும் திருஅவையின் பாதுகாவலருமான தூய யோசேப்பு பெத்லகேமைச் சேர்ந்த ஒரு தச்சர் என்பது நமக்கு தெரிந்தாலும் யோசேப்பைப்பற்றி வெகு அரிதாகத்தான் நற்செய்தியிலே நாம் பார்க்க முடியும். குறிப்பாக "யோசேப்பு நேர்மையாளராக இருந்தார்" (மத் 1:19) என்னும் செய்தி அவருடைய வாழ்க்கையைச் சுருக்கமாக நம் கண்முன்கொணர்கிறது. "நேர்மையாளர்" என்னும் சொல்லுக்கு விவிலியத்தில் தனிப்பொருள் உண்டு. யார் கடவுளுக்கு அஞ்சி, அவருடைய வழிகளைப் பின்பற்றி நடக்கிறார்களோ அவர்கள் "நேர்மையாளர்" என அறியப்பட்டனர். யோசேப்பும் இத்தகைய நேர்மையாளர் வரிசையில் வருகிறார். இவரிடம் காணப்பட்ட முக்கிய பண்பு எது என்று சொன்னால் அது "பிறரை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாத நேர்மையாளர்" என்பதே. அதன் அடையாளமாக நற்செய்தியில், "அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்" என்று நாம் பார்க்கின்றோம். நேர்மையாளருக்கு உரிய சிறப்புக்களுள் ஒன்று பிறரைப் பற்றி அவர் கொண்டிருக்கிற நல்லெண்ணம். நேர்மையாளர்களே பிறரையும் நேர்மையாளர் என ஏற்றுக்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. இயேசுவின் வளர்ப்பு தந்தையான தூய வளனாரின் திருவிழா தொடக்க காலத்தில் இருந்த தூய வளனாரை பலவற்றிற்கு பாதுகாவலராக திருஅவை ஏற்படுத்தி இருக்கிறது. இதிலிருந்து இவரின் சிறப்பை, திருஅவை அவருக்கு அளித்திருக்கிற மகுடத்தை நாம் புரிந்து கொள்ளலாம். நமது தேவைகளை நம்பிக்கையோடு, பொறுமையின் நேர்மையின் சிகரமான தூய வளனாரிடம் எடுத்துச் சொல்வோம் தனது பரிந்துரையின் மூலமாக இறைவனிடம் பேசி நமக்கு பெற்றுத்தர நம்மையே தகுதியாக்கிக் கொள்ளத் தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், திருஅவையின் பாதுகாவலரான தூய யோசேப்பைப் போல நற்குணமும் சரியான முடிவெடுக்கும் ஆற்றலையும் பெற்று இறைமக்களை நல்வழிநடத்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வு தரும் இறைவா, தூய யோசேப்பைக் குடும்பங்களுக்குப் பாதுகாவலராகத் தந்தமைக்கு உம்மைப் போற்றுகிறோம். அவரது நல்மாதிரியைப் பின்பற்றி நாங்களும், நேர்மையாளர்களாய் வாழவும், பிறர்மீது நல்லெண்ணத்தில் வளரவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் பிறப்பிடமே எம் இறைவா, அனைத்திலும் சிறந்தது உம் அன்பே என்பதை அறியும் நாங்கள், உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பைப் பகிரும் தாராள மனதை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# தவக்காலத்தின் 5ம் ஞாயிறு

திருப்பலி
22.03.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *எசே. 37: 12-14* II. *உரோ. 8: 8-11* *யோவா. 11: 1-45*

இறையேசுவின் இனிய இறைச்சமூகமே, இன்றைய தினம் தவக்காலத்தின் 5ம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க நாம் இன்று ஒன்றுக்கூடியுள்ளோம். இறைவாக்கினர் எசேக்கியேல் தம் முதல் வாசகத்தில், இஸ்ரயேல் மக்கள் கல்லறைக்கு ஒப்பான தம் அடிமைத்தனமான சிறைவாசத்திலிருந்து வெளியேறி அவர்தம் சொந்த நாட்டில் குடியேற சித்தம் கொண்டதையும் ஆண்டவர் உரைத்ததை ஆண்டவரே செய்து முடிப்பார் என்பதையும், தூய ஆவியை அவர்கள்மீது பொழிந்ததையும் சுட்டிக்காட்டுகின்றார். இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் ஊனியல்புக்கேற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் வாழ முடியாது என்றும், கிறிஸ்துவின் ஆவியை கொண்டிருக்கும் நாம், பாவத்தின் விளைவாக உடல் செத்ததாயினும், கிறிஸ்து நமக்குள் இருப்பதால், தூய ஆவியும் நம்முள் உயிராய் இருப்பதால், கிறிஸ்துவுக்கு ஏற்புடையவராய் இருப்பதால், இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்த அவரும் நம்முள் இருப்பதால் சாவுக்குரிய நம் உடல்களை உயிர்த்தெழச் செய்வார் என்பதை கூறுகிறார்.

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்" என்று ஆண்டவர் கூறுவதாக நற்செய்தியாளர் புனித யோவான் தன் நற்செய்தியில் விவரிக்கிறார். தான் அன்பு கொண்ட மார்த்தா, மரியா, லாசரின் குடும்பத்தில் லாசரின் மறைவை கண்ணோக்கி நான்கு நாள்கள் ஆன பின்னும் லாசரின் உயிர்ப்புக்கு வழிவகுத்த ஆண்டவர் இயேசுவின் மாட்சியை மக்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமென்று இதை செய்ததாக ஆண்டவர் கூறுவதை சிந்தித்து, தியானித்து நாமும் அவரிடம்

நம்பிக்கைக்கொண்டு அவருக்கு ஏற்புடையவர்களாக வாழ இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே என்றுரைத்த இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் நல்ல மக்களாக திருஅவையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து திருமறையின் மதிப்பீடுகளுக்கு ஏற்ற வகையில் வழிநடக்கும் மக்களாக வாழ உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, நீர் படைத்து உருவாக்கிய அனைத்தும் சிறிது சிறிதாக அழிந்துக் கொண்டு வருகின்ற இக்காலத்தில், பலவிதமான அழிவுகளைச் சந்திக்க நேரிடுகின்றன. எதிர்பாராத விபத்திலிருந்தும், நோயிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் மக்களை விடுவித்து, தாங்கள் செய்வது தவறு என்பதை உணர்ந்து பகைவரையும் அன்பு செய்து வாழும் நல்லுள்ளம் கொண்டவர்களாக நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் அரசரே எம் இறைவா, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கி அதை உன்னத நிலைக்கு உயர்த்தியவரே, இவற்றை நாங்கள் உணர்ந்து மதம், ஜாதி பேதமின்றி அனைவரையும் ஒரே உள்ளத்தோடு அவர்களின் தேவைகள் கடமைகள் என்னவென்பதை அறிந்து செயல்பட நல்லதொரு மனிதரை எங்களுக்கு அளித்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. தாயும் தந்தையுமான இறைவா, தாயின் கருவிலேயே எம்மை தெரிந்துக்கொண்டவரே, நீர் எங்களை எந்த நோக்கத்திற்காக தேர்ந்துக்கொண்டீரோ அதை நாங்கள் முழுமையாக கடைப்பிடித்து, உமக்கேற்ற மக்களாக நாங்கள் வாழ்ந்து, உமது படைப்பின் நோக்கத்தை அவர்களுக்கு எடுத்துரைத்து எவ்விதமான அசம்பாவிதங்களுக்கும் இடங்கொடுக்காமல் நாங்கள் வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



## ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெருவிழா

திருப்பலி
25.03.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

I. *எச. 7:10-14, 8:10* II. *எபி. 10:4-10* *லூக் : 1:26-38*

இறையேசுவில் பிரியமுள்ளவர்களே, இன்று நாம் ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெருவிழாவை, அதாவது மங்கள வார்த்தை திருவிழாவை

மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். இறைமகன் இயேசு நம்மை மீட்பதற்காக மனிதவுரு எடுக்கத் திருவுளம் கொண்ட இந்த நாளைத் திருஅவை ஒரு பெருவிழாவாகச் சிறப்பிக்கிறது. ஆதிப்பெற்றோர் செய்த தொடக்க நிலைப்பாவத்திலிருந்து மீட்புப்பெற, ஆயிரமாயிரம் ஆண்டுகள் காத்திருந்து, கன்னிமரியாவுக்கு மங்கள வார்த்தைச் சொல்லும் பெருவிழாவை திருஅவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. காலம் நிறைவேறிவிட்டது கடவுள் கன்னிமரியாவிடம் தூது அனுப்புகிறார். தூதரின் வாழ்த்துரை மீட்பு வரலாற்றில் மங்களகரமான தருணமாக அமைகிறது. கடவுளே தன் வானதூதரை மரியாவிடம் அனுப்பி வாழ்த்துகிறார். மரியாவின் வாழ்வில் அவர் முழு சுதந்திரத்துடன் இறைத்திட்டத்தை ஏற்று கடவுளோடு உடன் உழைப்பாளர் (1கொரி. 3:9) என்ற மனநிலையோடு மற்றெந்த மானிடப் பிறவியையும்விட வெகுவாய் இறையருளோடு ஒத்துழைக்கிறார். கடவுளின் ஒட்டுமொத்த மீட்புத்திட்டமும் (தொ.நூ. 3:15, கலா.4:4) மரியாவின் ஒத்துழைப்பைச் சார்ந்திருந்தது. மரியாவுக்குத் தூதனுப்பிய அந்த நிகழ்வில் கடவுள் தான் படைத்த உயிரிடம் (மரியாவிடம்) தன்னை இந்த மனிதத்துக்குள் இணைத்துக்கொள்ள உதவுமாறு, மரியாவின் சுதந்திரமான ஒத்துழைப்பை நாடினார் என்று சொல்கிறார். மேலும் மரியாவைத் தன் தாயாகத் தேர்ந்துக்கொள்கிறார். எனவே நாமும் இயேசுவின் தாய் மரியாவை நம்முடைய தாயாக ஏற்றுக் கொண்டு, அன்னை மரியாவைப் போல இறைவனின் திருவுளத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்டு வாழவும், நம் வாழ்விலும் இறைவார்த்தை உருவெடுக்கவும் வரம் கேட்டு நமது மீட்புக்கு முழுமனதோடு ஒத்துழைக்க பக்தியோடு இப்பெருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் இந்த ஏழு புனிதர்கள் வாழ்ந்த சாட்சிய வாழ்வை வாழ்ந்து இறை மக்களை இறைவன் பால் ஈர்த்து புதுயுகம் புத்தாண்டில் மலர வளர உம்மை மன்றாடுகிறோம்.

2. பாசத்தால் எம்மை ஈர்க்கும் இறைவா, உலக மக்கள் அனைவரும் ஒரணியில் திரண்டு உமது அன்பு வழியில் பயணிக்கவும் ஒருவரையொருவர் புரிந்துக்கொண்டு விட்டுக்கொடுத்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உறுதிப்படுத்தும் இறைவா, இன்றைய காலக்கட்டத்தில் வாலிப பிள்ளைகள் தங்களின் மனம் போன போக்கில் குடும்பம், சமூகம், உலகு இன்ப நாட்டங்களில் மூழ்காமல் இறைப் பற்றில் ஆழமாக வேரூன்றி வாழ உமது இரக்கம் கருணை வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

திருப்பலி
29.03.2026

## முன்னுரை

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *எசா. 50: 4-7* II. *பிலி. 2: 6-11* *மத். 26: 14-27: 66*

இயேசு கிறிஸ்து எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்புடன் நுழைந்ததைக் கிறிஸ்தவர்களால் ஆண்டுதோறும் நினைவுப்படுத்தும் ஒரு நிகழ்வு, குருத்து ஞாயிறாகும். புனித வாரத்தின் தொடக்கமாகவும், நுழைவு வாயிலாகவும் குருத்து ஞாயிறு அமைகிறது. இன்றைய முதல் வாசகத்தில் அடிமை நிலையிலிருந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதே இறைவாக்கினர் எசாயாவின் பணியாகும். கடவுளின் ஊழியர் எந்தளவுக்கு பொறுமையோடும், கடவுள் தனக்கு உதவிக்கரம் நீட்டுவார் என்ற நம்பிக்கையோடும், துன்பங்களைக் தாங்கிக் கொள்கிறார் என்பதை படம் பிடித்துக்காட்டுகிறது. இரண்டாம் வாசகத்தில், பிலிப்பியர் மக்களிடம் இருந்த பொறாமை, தன்னலம், ஆணவம் ஆகியவற்றிற்கு மாற்று மருந்தாக இயேசுவின் தாழ்ச்சியை புனித பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.

இயேசு கடவுளாக இருந்தாலும் எவ்வாறு தன்னையே ஒரு அடிமையின் நிலைக்குத் தாழ்த்தினாரோ அதைப்போல நாமும் தாழ்ச்சியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று புனித பவுலடிகளார் குறிப்பிடுகிறார். இன்றைய நாளைக் "குருத்து ஞாயிறு" எனவும், பாடுகளின் ஞாயிறு எனவும் அழைக்கப்படுகிறது. குருத்தோலை வெற்றி மற்றும் மகிமையின் சின்னம், சமாதானத்தின் அடையாளம். இயேசுவை அரசனாக ஏற்றுக்கொண்ட மக்களின் நம்பிக்கை. மகிழ்ச்சியின் அடையாளம். பழைய ஏற்பாட்டில் ஆண்டவர்தாமே கூடாரப் பெருவிழாவில் முதல் நாளில் ஓலை மற்றும் தளிர்கள், இலைகளைக் கொண்டு வந்து ஆண்டவர் திருமுன் மகிழ்ந்திருக்குமாறு மக்களைப் பணிக்கிறார்.

திருவெளிப்பாடு நூலில் கடவுளின் முத்திரையிடப்பட்டவர்கள் வெண்ணிற ஆடை அணிந்து கையில் குருத்தோலைகளைப் பிடித்திருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு எருசலேம் நகருக்குள் யூதரின் அரசராக, வெற்றியின் வேந்தராக, நீதியுள்ளவராக, எளிமையுள்ளவராக நுழைகிறார். தாவீதின் நகரில் தாவீதின் மகனாக இயேசு எருசலேம் அரசராக வெற்றி நடைப்போடுகிறார். அடிமைப்பட்டு வாழ்ந்த மக்கள் தங்களை மீட்க ஒரு அரசர் வருவார் என்று நாள்தோறும் காத்துக்கிடந்தனர். அற்புதங்களையும், அறிகுறிகளையும் கண்ட மக்கள், நோயின் பிடிலியிருந்தும், மக்களை ஏமாற்றுவோரிடமிருந்தும் விடுவிக்கப்பட்ட மக்கள் இயேசுதான் தாங்கள் எதிர்ப்பார்த்த மெசியா என்று நம்பி வழிநெடுக துணிகளையும், தழைகளையும் பரப்பி கைகளில் குருத்தோலைகளை ஏந்தி, "ஓசன்னா, தாவீதின் மகன் ஓசன்னா ஒசன்னா" என்று சத்தமாக மகிழ்ச்சிக் கீதம் இசைத்தனர். ஆனால் இயேசு மண்ணக அரசர்களிடமிருந்து வேறுபட்டவர் என்பதை அவர்கள்

புரிந்துக்கொள்ளவில்லை. ஆனால் இயேசு பாடுகளின் வழியாக மீட்பு உண்டு என்று உலகுக்கு உணர்த்தினார். இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணமும் நமது நம்பிக்கைப் பயணமாக இருக்க இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நீதியின் நாயகரே எம் இறைவா, எளிய உள்ளமும், இறைபக்தியும் கொண்ட எம் திருஅவைத் தலைவரையும் அவரோடு இணைந்து உம் பணிபுரியும் குருக்கள், ஆயர்கள், கர்தினால்கள் மற்றும் திருநிலை பணியாளர்கள் அனைவரையும் உம்பதம் ஒப்புக்கொடுக்கின்றோம்.

2. எளிய உள்ளத்தினரையும், ஏழ்மையில் வாழ்வோரையும் கனிவுடன் காப்பவரே, நாட்டுத் தலைவர்களும் தங்களின் கடமைகளை உணர்ந்து மக்களின் தேவைகளை கவனத்தில் கொண்டு யார் யாருக்கு என்னத்தேவை என்பதை அறிந்து செயல்படவும், எவ்வித பாரபட்சமுமின்றி அனைவரையும் சமமாக மதித்து வழிநடத்தக்கூடிய தாராள மனதை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. துயருவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர் என்றவரே, நாட்டிலும் வீட்டிலும் பலவிதமான நோயினாலும் துன்பங்களாலும் தங்களையே மாய்த்துக்கொள்ளும் மக்களை நீர் கண்ணோக்கும். அவர்களின் துன்ப துயரங்களை வேதனைகளை உமது கனிவிரக்கத்தினால் அவர்களின் துன்பங்களிலிருந்து விடுதலையளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. தூய்மையே ஆடையாகக் கொண்டவரே, இந்தப் புனித வாரத்தில் நாங்கள் அனைவரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புப் பெற்று இயேசுவின் பாடுகளையும், இறப்பையும் மனதில் கொண்டு ஆழமாகத் தியானித்து உமது புனிதத் தன்மையை நாங்களும் பெற்று உள்ளத்தளவிலும், மனதளவிலும் தூய்மை வாழ்வு வாழ எங்கள் பாவக்கறைகளை அடியோடு அழித்து உம்மை பின்பற்றி வாழும் நல்லுள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# சிலுவைப் பாதை

முதல்வர் : தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே!
அனைவரும் : ஆமென்.

**தொடக்கச் செபம் :** அளவில்லாத அன்பும், கரை கடந்த கருணையும் கொண்ட இறைவா! உம் ஒரே மகனை எமக்காகப் பலியாக்கினீர். அவர் நடந்து சென்ற கல்வாரிப் பாதையின் காட்சிகளை தியானிக்க இருக்கின்ற எங்கள் அனைவரையும் ஆசிர்வதியும். எங்களின் அன்றாட வேலைகளின் அவசரத்திலும், களைப்பிலும், நோயிலும், வேதனையிலும் உம்மைத் தேடி வந்திருக்கின்றோம். நீர் அனுபவித்த ஒவ்வொரு துயரமும், வேதனையும் எனக்காக என்பதை உணரச்செய்யும். உமது பாடுகளோடும் மரணத்தோடும், எம் கஷ்ட நஷ்டங்களை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். நானே விரும்பி, முயற்சி எடுத்து உமது சிலுவைப் பயணத்தில் உம்மைப் பின்தொடர எனக்கு, வலிமையைத் தாரும். தன்னையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு எங்களின் பாவங்களுக்காக வாழ்ந்த உமக்கு, அளவில்லா துன்பங்களையும், உடல் மன வேதனைகளையும், எங்களின் பாவ ஈடேற்றத்திற்கே என்பதை நாங்கள் உணர்ந்து மனந்திருந்தி உம்மை பின்தொடர்ந்து வாழ அருள்தாரும்.

**ஒவ்வொரு நிலைக்கு முன்னும் :**

- திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**நிலைக்கு பின்னும் :**

- எங்கள்மேல் இரக்கமாயிரும் இயேசுவே, எங்கள்மேல் இரக்கமாயிரும்
- இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக - ஆமென்.

### முதல் நிலை : இயேசு அநியாயத் தீர்வையிடப்படுகிறார்

நான் உண்மையை உலகிற்கு காட்ட வந்தேன். நானே உண்மையும் உயிரும், வழியும் ஒளியும். உண்மைக்கு சாட்சியாக வந்த என்னை, இந்த உலகம் தீர்ப்பிடுகின்றது. இவ்வுலகத்தின் செயல்களுக்கு தீர்ப்புக் கூற வேண்டியவன் நானிருக்க, இவ்வுலகம் எனக்கே தீர்ப்பிடுகின்றது. அதுவும் அநியாயத் தீர்ப்பு.

**செபம்:** அநியாயமாக குற்றம் சுமத்தப்பட்ட இயேசுவே! நீர் நல்லவர் என்றும், குற்றமற்றவர் என்றும் தெரிந்து, பழிவாங்கும் உணர்வோடும், பகைமை மனத்தோடும் செயல்பட்ட நெஞ்சங்களைப் போன்று நானும் செயல்பட்டேன், என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும். ஆமென்.

### இரண்டாம் நிலை : இயேசுவின் தோள்மீது பாரச்சிலுவையைச் சுமத்துகிறார்கள்

உண்மையை உலகிற்கு காட்டவும், நீதியை நிலைநாட்டவும், அன்பை விதைக்கவும், நன்மையை நாடச் செய்யவும் வந்த எனக்கு, அன்று நீங்கள் தந்த பரிசு பாரச்சிலுவை. இன்றும் இறையடியார்களுக்கும், சமூகத் தொண்டர்களுக்கும், நீதிமான்களுக்கும், நற்பணி ஆற்றுவோருக்கும், இடையூறாகவும், அவர்களுக்கு அவப்பெயரை கொணர்பவர்களாகவும் இருக்கின்றீர்களே! பிறரின் துன்பத்தில் இன்பம் காணும் கல் மனம் கொண்டவர்களாய் வாழ்வது ஏன்?

**செபம்:** சிலுவையை தோளில் சுமந்த இயேசுவே! பிறரின் சுமைகளை, மனக் குறைகளை தாங்கியவர் நீர். ஆனால் உம்மீது பாரச்சிலுவை சுமத்தப்படுகின்றது. பிறரின் துன்பம் தாளாது அழுபவர் நீர். கஷ்டப்படுவோரின் கண்ணீரைத் துடைத்தவர் நீர். உம் கண்களிலோ முள் முடியின் காயங்களால் வழியும் இரத்தம். இயேசுவே! பிறரை துன்புறுத்தாமல் பிறரின் துன்பத்தில் பங்கெடுக்கும் நல்ல பிறவியாக என்னை மாற்றும். ஆமென்.

### மூன்றாம் நிலை: இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

உன் குற்றங்களும், பாவங்களும் எத்தனை கொடூரமும், வேதனையும் என்பதை, நீ என்றாவது சிந்தித்தது உண்டா? இதோ நான் தரையில் சிலுவையின் பாரம் தாங்காமல் ஒரு புழுவைப்போல் விழுந்து கிடக்கின்றேனே, என்னை இந்தக் கோலத்திற்கு உட்படுத்தியது உன் பாவங்கள். நான் எழுந்து நடக்க வேண்டுமென்றால், உன் உதவி எனக்குத் தேவை. உன் பாவங்களை விட்டு எழுந்திரு. அதற்கான உறுதி கொள். நீ உன் பாவங்களைக் குறைத்து, திருந்தி நடந்தால், என் பாரம் குறையும்.

**செபம்:** முதல் முறை விழுந்த இயேசுவே! சிலுவையின் பாரம் உம்மை கீழே தள்ளியதா? அல்லது என் பாவங்கள் உம்மை கீழே தள்ளியதா? என் பாவச் சுமைதான் உம்மைத் தள்ளி இருக்க வேண்டும். நான் பாவங்களை விட்டு விலகினால் உமது பாரம் குறையும். என் பலவீனத்தால், ஆசைகளால், அகங்காரத்தால் நான் செய்யும் தவறுகளை உணர்ந்து, திருந்தி வாழ உதவியருளும். ஆமென்.

### நான்காம் நிலை : இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

காணாமல் போன என்னைத் தேடி எருசலேம் தேவாலயம் வந்த என் தாய், இதோ கல்வாரிப் பாதையிலும் தேடி வந்து, என் துயரில் பங்கு கொள்கிறாள். உலகை படைத்து உலகை மீட்க வந்த எனக்கு உலகம் தரும் அவமானங்களை அவள் நேரில் பார்க்கிறாள். என் தாயின் வேதனைகள் உனக்கு புரிகிறதா? பெற்ற பிள்ளைகளால் அவமானப்படுத்தப்படும் தாய்மார்கள் நிறைய பேர். சோறூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்த தாயின் வயிற்றுக்கு, அவளின் முதிர்ந்த வயதில், உணவுகூட கொடுக்காமல் வேதனையுறச் செய்யும் பிள்ளைகளில் நீயும் ஒருவனா? தாயின் சந்திப்பு எனக்கு வலிமை தருகிறது. உன்னை பெற்றெடுத்த பெற்றோரை எண்ணிப்பார்.

**செபம்:** அன்பு இயேசுவே! என்னைப் பெற்றெடுத்து ஆளாக்கிய பெற்றோருக்கு எதிராக நடந்தும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்ய மறுத்தும், சுயநலத்தோடு வாழ்ந்திருக்கிறேன். பிறரின் நலனிலும், என் பெற்றோரின் நலனிலும் ஆர்வமும், அக்கறையும் கொள்ள எனக்கு நல்ல மனதைத் தாரும். ஆமென்.

### ஐந்தாம் நிலை : இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்

என்னைச் சுற்றி சிலுவைப் பவனியை வேடிக்கை பார்க்க, பரிதாபப்பட, கண்ணீர்விட நீங்கள் இருந்தும் என்ன பயன்? எனக்கு உதவி செய்ய யாருமில்லையே? என்னால் குணப்படுத்தப்பட்டவர்கள், என்னால் பசியாற உணவுண்டவர்கள், என்னால் ஆறுதலும் ஆசீரும் பெற்றவர்கள் எவ்வளவோ பேர் இருந்தும், ஓர் அந்நியன், என் சிலுவையைச் சுமக்க கட்டாயப்படுத்தப்படுகின்றான். உனக்கு உதவி செய்யும் மனம் இல்லையா? என்னுடன் உறவாடவும், என்னை உட்கொள்ளவும், என்னில் நீ வாழவும், எவ்வளவோ வழி இருந்தும், என்னை விட்டு வெகுதொலைவு செல்கின்றாய். பல சமயங்களில் பிற மதத்தவர் காட்டும் பற்றுதலும் நன்றியும் கூட நீ காட்டுவதில்லையே.

**செபம்:** இயேசுவே! எனது சுயலத்தால், என் அசட்டுத்தனத்தால், சோம்பலால், நல்ல பல செயல்களைச் செய்ய வாய்ப்பு இருந்தும், தவறி இருக்கிறேன். நீர் காட்டிய கனிவும், இரக்கமும், அன்பும் அளவிட முடியாதது, உமது சீடனாகிய எனக்கும் அதே அன்பைக் கற்றுத் தாரும். ஆமென்.

### ஆறாம் நிலை : வெரோணிக்காள் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறாள்

வெரோணிக்காவை போன்று, என்முன் அமர்ந்து என் பாடுகளைத் தியானிக்கும் நீயும், என்னால் படைக்கப்பட்ட மனிதப் பிறவி தானே? அவளுக்கு இருந்த மனத்திடமும், ஆழ்ந்த அன்பும், உனக்கு இல்லையே! வெரோணிக்காவை என்றோ ஓரிரு முறை சந்தித்திருப்பேன். உன்னை நான் தினமும் திருப்பலியில் சந்திக்கிறேன். 24 மணி நேரமும் உனக்காக காத்திருக்கிறேன். இன்னும் உனக்கு என்மீது நம்பிக்கையும், அன்பும் ஏற்படாதது ஏன்?

**செபம்:** ஆண்டவரே! வெரோணிக்காவிடம் இருந்த துணிவு எனக்கும் வேண்டும். அவரது அன்பாலும், துணிவாலும் அவள் செய்த செயலினை பாராட்டி உம் திருமுகத்தையே அந்த துணியில் பதியச் செய்தீர். அவரின் தைரியத்தை என்னுள்ளும் வளர்த்தருள உம்மை வேண்டுகிறேன். ஆமென்.

## ஏழாம் நிலை : இயேசு இரண்டாம் முறை விழுகிறார்

கல்வாரியை நெருங்க நெருங்க என் சக்தியெல்லாம் குறைகிறது. நான் வலுவிழந்து இதோ புழுதியில் கிடக்கின்றேன். எனக்கு ஆறுதல் கூறவோ, எனக்கு உதவவோ யாரும் இல்லை. இவ்வுலகமே என்னுடையதாக இருக்க, இதோ நான் உனக்காக அநாதை போன்று விழுந்து கிடக்கின்றேன். எனக்காக நீ உண்மையில் மனம் இரங்கினால், உன்னிடம் உள்ள தீய பழக்கங்களை விட்டுவிட்டு என்னைப் பின் செல்.

**செபம்:** இரண்டாம் முறையும் இயேசுவே, நீர் விழுந்துவிட்டீர். பாரச் சிலுவையைவிட உலகினரின் பாவச் சுமை அதிகமாக உம்மை வதைக்கிறது. உம் இறைஇயல்பை இழந்து, மனித இயல்புக்கு உம்மை தாழ்த்தினீர். உமது பெருந்தன்மையை உணராத நான் உம் பாடுகளுக்கு காரணமானேன். உமது உடலை புழுதியில் புரட்டிய எனக்கு மன்னிப்பைக் கொடுத்து, எழுந்து உம்மோடு நடக்க மனவலிமைத் தாரும். ஆமென்.

## எட்டாம் நிலை : இயேசு தன்னைப் பின்தொடரும் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்

உன் பாவங்களுக்காகத் தான் நான் இக்கொடிய துன்பங்களை ஏற்றிருக்கிறேன். நீ எருசலேம் பெண்களைப் போன்று எனக்காக அழுது பயனில்லை. உன் பாவங்களுக்காகவும், மற்றவர்களின் பாவங்களுக்காகவும் மனம் வருந்தி அழு. அதுதான் உன்னைக் காக்கும். உன் திருந்திய வாழ்வுதான் எனக்கு தேவை. உன் போலிக் கண்ணீரும் இரக்கமும் எதற்கும் உதவாது. தாழ்மையான மனதுடன், நீ செய்த குற்றங்களை நினைத்து உன்னையே நீ யாரென்று அறிந்து கொண்டு, அதற்காக அழுது மன்னிப்புக் கேள். பின்பு இறையருளைப் பெற்றுக்கொள்.

**செபம்:** எருசலேம் பெண்களைச் சந்தித்த இயேசுவே! என்னையும் சந்திக்க வாரும். என்னில் உள்ள நன்மைகளையும், தீமைகளையும் உணர்ந்து நல்லதை வளர்க்கும் மனப் பக்குவமும், தீமையை விலக்கும் தைரியமும் எனக்கு வேண்டும். "எனக்காக அழ வேண்டாம், உங்களுக்காக அழுங்கள்" என்றீரே! என்னையே நான் நியாயப்படுத்துவதைவிட என் உண்மையான நிலையை ஏற்றுக் கொள்வதே எனக்கு நன்மை பயக்கும் என்பதை உணரச் செய்யும். ஆமென்.

## ஒன்பதாம் நிலை : இயேசு மூன்றாம் முறை விழுகிறார்

மீண்டும் மீண்டும் விழுந்து கிடக்கும் இக்கோரக் காட்சியைக் காணும் உன் கண்கள் இரக்கமற்றவையா? உன் உள்ளம் பாறையாகி விட்டதா? விழுந்த என்னைத் தூக்கிவிட உனக்கு மனம் இல்லையா? நீ ஆயிரம் முறை பாவத்தில் விழுந்தாலும் உன்னை தூக்கிவிட்டு மன்னித்து அனுப்ப, நான் தயாராய்

இருக்கிறேன். உன் சுமைதாங்கி நான். உன் அயலான் உனக்குச் செய்யும் சிறு குற்றத்தைக் கூட மன்னிக்கவும், மறக்கவும் உனக்கு மனம் இல்லையே, ஏன்?

**செபம்:** மூன்று முறை விழுந்த இயேசுவே! "நானும் உன்னை தீர்ப்பிடேன், இனி பாவம் செய்யாதே" என்று சொல்லி பாவம் செய்தவளுக்கு, உம் கருணை உள்ளத்தை காட்டினீர். பிறரின் சுமைகளைத் தாங்கி சுகத்தைக் கொடுக்காத நேரத்திற்காக நான் மனம்திருந்தி வாழ உணரச் செய்யும். ஆமென்.

### பத்தாம் நிலை : இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

ஆடைகள் களையப்பட்டு அரைமனிதனாக எலும்புகளை எண்ணக் கூடிய அளவுக்கு, என் உருவம் மாறி நிற்கின்றேன். என்னை இந்தக் கோலத்தில் காணும் நீ என்ன நினைக்கின்றாய்? ஒரு சிறு துன்பம் வந்தாலும் முணு முணுக்கிறாய், எனக்கு எதிராகப் பேசுகிறாய். பொறுமை என்ற அணிகலனை அணிந்துக்கொள். துன்பத்தில் இன்பம் காண முயற்சி செய். ஏன் உலக வாழ்வையே உனக்காக அளித்தவன் நான். உனக்காகவே நான் இருக்கிறேன் என்பதை மறவாதே. குருவிகள் பலவற்றிலும் மேலானவன் நீ, உன்னை நான் காப்பேன்.

**செபம்:** ஆடைகளை இழந்த இயேசுவே! எங்கள் மீட்புக்காக உம்மையே இழந்தீர். இன்று சமூக அமைப்புகளில் காணப்படுகின்ற பாரபட்சமான போக்கு, அநீதி, அலட்சியம், அதிகாரம், ஆணவம், சீர் குலைந்த நிர்வாகம், சுய நலமான சுரண்டல்கள், இவை மறைய உம்மையே நீர் இழந்தீர். மனிதர்கள் ஒவ்வொருவரும் உம்மைப் பின்பற்றி நீதிக்கும் அன்புக்கும் சமத்துவ சமூக அமைப்புக்கும் கருணையோடு செயல்பட உதவியருளும். ஆமென்.

### பதினொன்றாம் நிலை : இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்

மூவுலகின் தேவன் என்னை, மூன்று ஆணிகளுக்குள் அடக்கி விடத் துணிந்த இந்த உலகின் பரிதாப நிலையை, நான் எவ்வாறு விவரிப்பேன்? நீ செய்யும் பாவம் என்னும் ஆணிகளால் தினமும் என்னைச் சிலுவையில் அறைகிறாய் என்பதை மறவாதே. பாவத்தால், நீ சிலுவையில் அறைந்த கைகள் தான், உன்னை அணைக்கத் துடித்த கரங்கள். நீ ஆணிகளுக்குள் முடக்கி விட்ட கால்கள் தான் உன்னைத் தேடி அலைந்த கால்கள். இதோ குத்தி திறக்கப்பட்ட இதயம் தான் உன்னை நேசித்த இதயம். உன் புண்ணிய வாழ்வால் இந்த ஆணிகளைப் பிடுங்க முயற்சி செய்.

**செபம்:** இயேசுவே! உம்மை மூன்று ஆணிகளில் அடக்கி விட்டார்கள். மனிதர்கள் நாங்கள் எங்கள் பாவங்களை அறைவதற்கு பதிலாக உம்மை அறைந்து விட்டோம். ஆணி கொண்ட உமது காயங்களை அன்புடன் முத்தி செய்கின்றேன். உமது காயங்களுக்குள் என்னை மறைத்தருளும். திறந்த உமது இதயத்தில் எனக்கொரு இடம் கொடும். உள்ளக் காயங்களை ஆற்றி அமைதியை எனக்குத் தாரும். ஆமென்.

## பனிரெண்டாம் நிலை : இயேசு சிலுவையில் மரிக்கிறார்

எனது 33 கால வருட வாழ்வில் போற்றியவர்களும் உண்டு, தூற்றியவர்களும் உண்டு. இதோ என்னுடைய இந்த இறுதி நேரத்திலும் என்னால் பயனடைந்தவர்களைவிட என்னை வெறுத்தவர்களே அதிகம் பேர் கூடி இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் மன்னிக்கிறேன். எனக்காக என்று, நான் எதையும் வைத்துக் கொள்ளவில்லை. என் உயிரையும் உனக்காக கொடுத்துவிட்டேன். நீ மட்டும் உன் அயலானை மன்னிக்கவோ, அவனுக்கு உதவவோ மறுக்கிறாயே. பின்னர் எப்படி எனக்குத் தகுதியுள்ளவனாக முடியும்? என் சவாலால் உனக்கு வாழ்வு கிடைத்தது. என் உயிரால் உன் உயிர் புத்துயிர் பெறுகிறது.

**செபம்:** சிலுவையில் மரித்த இயேசுவே! மரணத் தருவாயில் கூட மன்னிப்பின் அவசியத்தை உணர்த்தினீர். இன்று உலகிலும் குடும்பங்களிலும் அமைதி நிலவ, மன்னிப்பின் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளச் செய்யும். பகையால், வெறுப்பும் அழிவுமே மிஞ்சுகிறது. உமது மரணம் கொண்டு வந்த மீட்பை முழுமையாக நானும் பெற வேண்டும். நான் வாழ்வு பெற, நீர் உமது வாழ்வை இழந்தீர். நான் இழந்துள்ள அமைதியான வாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ள உதவி புரியும். ஆமென்.

## பதிமூன்றாம் நிலை : இயேசுவைத் தன் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்

என் தாயைப் போல் உள்ளம் கொண்டவர்களை, எங்கேனும் நீ கண்டதுண்டா? தன் ஒரே மகனை இழந்தும், இறைவனின் திருவுளம் அது என்று பணிந்து வாழ்கிறாள். அவளின் துயரம் எத்தகையது என்பதை உன்னால் உணர முடிகிறதா? அப்படியானால் என் அகோர மரணத்திற்கு காரணமான உன் பாவங்களை விட்டு விலகு. என் தாயைப் போல் என் விருப்பத்தை ஏற்று, அதன்படி வாழ முயற்சி எடு. உன் சுயநலம், பொறாமை, பேராசை, வஞ்சகம் இவற்றை விட்டுவிலகு. அன்பு என்ற அணிகலனை அணிந்துக்கொள்.

**செபம்:** வியாகுல மாமரியே! துன்பமும் துயரமும் உனது வாழ்வைச் சந்தித்தபோதெல்லாம் இறைவனின் விருப்பம் அதுவெனக் கண்டாய். மனித வாழ்க்கையில் எங்களின் துயரங்களையும் வேதனைகளையும் புரிந்து கொண்டவளாக நீ இருக்கிறாய். வேதனை, துன்பம் வந்தபோதெல்லாம் அம்மா உன் துணை நாடி வரும் என்னை காத்தருள்வாயாக. ஆமென்.

## பதினான்காம் நிலை : இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

நான் அடக்கம் பண்ணப்படுவது, வேறொருவரின் கல்லறையில். எனக்கென்று ஒரு கல்லறை கூட இல்லை. நீயோ உன் உதவி தேடி வந்தவர்களிடமும் முகம் சுழிக்கிறாய், ஏசுகிறாய். என்னை அடக்கம் பண்ணிவிட்டதாக எண்ணிக் கொண்டார்கள். நான் மூன்றாம் நாள் உயிர்த்து எழுவேன். நீயும் என்னோடு உன் பாவத்திலிருந்து உயிர்த்தெழ வேண்டும். நீ உண்மையான கிறிஸ்துவன் என்று காட்ட அது ஒன்றுதான் சாட்சியாக முடியும். உன் பாவங்களையும் என்னோடு சேர்த்து கல்லறையில் வைத்து மூடி, புது மனிதனாக, புனிதனாக வாழ வேண்டும் என்பதே என் ஆசை.

**செபம்:** கல்லறையில் துயில் கொள்ளும் இயேசுவே! உண்மைக்கும், அன்புக்கும், நீதிக்கும் உயிர் கொடுத்த உம்மை அடக்கி வைக்க பூமிக்கு வலுவில்லை. இயேசுவே! நீரே எங்களது நம்பிக்கை. துயரமும் தோல்வியும் எங்களைச் சந்தித்தாலும், உமது உதவியால் வெற்றி கொள்ள முடியும் என்று நம்புகிறோம். கவலையும் கஷ்டமும் எங்களை வாட்டினாலும், உமது நம்பிக்கையே எங்கள் பலம். உம்மில் உள்ள நம்பிக்கையை அதிகமாக்கும். எங்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும். ஆமென்.

**இறுதிச் செபம் :**
திருத்தந்தையின் கருத்துக்களுக்காக...
விண்ணுலகில்... அருள்மிகப் பெற்றவளே...
எல்லோரும் : ஆமென்.

## சிலுவைப் பாதை -2 : அருட்திரு. அகஸ்டின் ச.ச

### திருத்தூதர்களோடு, அவர்களின் பார்வையில் அன்பின் பாதை...

ஒவ்வொரு ஆண்டும் தவக்காலத்தில் பல்வேறு வகையில் நாம் ஆண்டவரின் சிலுவைப் பாதைகளை தியானித்திருக்கின்றோம். இன்று நம்முன் இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்காக மறைசாட்சியராய் மரித்த திருத்தூதர்களோடும் அவர்களின் பார்வையில் இயேசுவின் பாடுகளை தியானிக்க ஓர் அழைப்பு.

அன்று நாங்கள் அனைவரும் அவரோடு தான் இருந்தோம். உரோமை படைவீரர்கள் இயேசுவிடம் வந்து அவரிடம் வஞ்சகத்தோடு உரையாடி அவரை கைது செய்து மரண தீர்ப்புக்கு கையளிக்க வேண்டும் என்ற யூத தலைவர்களின் ஆலோசனையோடு அவர்கள் வந்ததை உணர்ந்தோம். ஆனால், அச்சமயம் திருத்தூதர்களாகிய நாங்கள் துணிவில்லாமல் இருந்ததால் அவருக்காக, அவரோடு நாங்கள் எங்கள் உயிரை துறக்க முன்வரவில்லை. எங்களின் சுயநலத்தால் நாங்கள் அவரை தனியே விட்டுவிட்டு ஓடிவிட்டோம். ஆம் எங்களில் ஒருவர் ஆடையை களைந்துவிட்டு ஆடையின்றி ஒடியதும் உண்மையே! "உயிர் பிழைத்தால் போதும்" என்ற அளவிற்கு கோழைகளாக இருந்தோம் என்பதும் உண்மையே! ஆனால் இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் அவரது அளவில்லா இரக்கமும், மன்னிப்பின் வழியாக அவரது முழுமையான எல்லையில்லா அன்பை உணர்ந்தோம். அவரின் அன்பும் ஆசீரும் எங்களை அவருக்காக எதையும் துறக்கும் துணிவையும் மன தெளிவையும் தந்தது.

என் அன்பு சகோதரியே, சகோதரனே, அதே இயேசு இன்று, உன்னையும் உனது குடும்பத்தையும், நம்மீது அவரின் அளவில்லா அன்பையும் அருளையும் பொழிந்து இன்னொரு கிறிஸ்துவாக வாழ நம்மை அழைக்கின்றார். இப்பாதையில் முதலை கண்ணீர் வடிப்பதை தவிர்த்து, முழுமையான

மனமாற்றம் இல்லாமல் உனது இல்லம் செல்வது பயனற்றது. ஆகவே இப்பாதையில் உன் தவறுகளை உணர்ந்து மனமாற்றம் பெற்று இன்னொரு கிறிஸ்துவாக வாழ முயற்சி செய். இறையேசுவோடு இப்பாதையில் பயணிக்க எழுந்து வா.

திவ்விய இயேசுவே...

### 1. தீர்ப்பு - அர்மேதியாவிலிருந்து பர்த்தலமேயு

பிலாத்து தனது பதவியைத் தக்க வைத்துக்கொள்ள இயேசுவை "தீவிரவாதி, நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் ஆபத்தான நபர், அவரது இறப்பு நாட்டிற்கே ஆபத்து" எனவே அவருக்கு மரணத்தை தண்டனையாக வழங்கினான். இயேசுவின் சீடனாகிய பர்த்தலமேயு என்னும் நான் அர்மேதியா என்னும் நாட்டிற்கு சென்றேன். நற்செய்தியை அறிவித்ததால் இயேசுவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு எனக்கும் வழங்கப்பட்டது. எனவே அந்நாட்டு அரசனின் ஆணைப்படி எனக்கு பழுப்பு நிற உடை உடுத்தி கசையாலும் இரும்பு தடியாலும் அடித்து நற்செய்தியை பறைசாற்றுவதை நிறுத்த கட்டளையிட்டான். ஆனால், இயேசுவோடு வாழ்ந்த அனுபவமும் தூய ஆவியாரால் உந்தப்பட்டு மரணத்தை தழுவினாலும் நற்சாட்சியம் பகிர்வதை நிறுத்தமாட்டேன் என்பதில் உறுதியாக இருக்க செய்தது. இதனால் என் தலையை வெட்டி கொலை செய்தார்கள். என் அன்பு தோழனே தோழியே, எனக்கு அருளப்பட்ட வாய்ப்பு தினமும் திருப்பலி வழியாகவும் அருள் அடையாளங்கள் வழியாகவும் உனக்கும் அருளப்படுகின்றது. இயேசுவைப்போல் தீர்ப்பிடாமல் மன்னித்து பிறருக்கு வாழ்வளிக்க போகிறாயா? அல்லது தீர்ப்பிடுதல் மூலம் மரணத்தையும் உறவு முறிவையும் பிரிவையும் தர போகிறாயா? ஒவ்வொரு முறை நீ நீதிக்காக போராட மறுக்கும் தருணமெல்லாம் நீ பிலாத்துவைப்போல் இயேசுவை தீர்ப்பிடுகின்றாய் என்பதை மறவாதே.

எங்கள் பேரில்...

### 2. சுமை - சிரியாவிலிருந்து அல்பேயுவின் மகன் யாக்கோபு

கசை அடியும் முள்முடியும், ஆளுனரின் மிரட்டலும், யூத மத தலைவர்களின் அச்சுறுத்தலும் இயேசுவின் வாழ்வையும் அவரின் செயல்களையும் மாற்றிட இயலவில்லை. எனவே அவர் சிலுவை சுமக்க கட்டாயப்படுத்தப்பட்டார். இயேசுவோ, சிலுவையை அன்பின் பரிசாக பார்த்து சிலுவையை முத்தமிட்டு ஏற்றார். அவரின் சீடனாக அவரோடு வாழ்ந்த அல்பேயுவின் மகன் யாக்கோபு என்ற நான் சிரியாவில் (Syria) அன்பின் நற்செய்தியை ஆர்வத்தோடு எடுத்துரைத்ததால் கற்களாலும் தடியாலும் அடித்துக் கொன்றபோது இயேசு எவ்வாறு சிலுவையை அன்பின் பரிசாக ஏற்றாரோ, அவ்வாறே நானும் என்மீது எரியப்பட்ட கற்களையும், தடிஅடியையும் அன்பின் பரிசாக ஏற்று அன்பிற்கு சான்று பகிர்ந்தேன்.

என் அன்பு தோழனே தோழியே, உனது வாழ்விலும் சாவிலும் இயேசுவைப்போல் துன்பங்களையும் துயரங்களையும் அன்பின் பரிசாக

ஏற்பாயா. குறிப்பாக உனது குடும்பத்திற்காக, உனது உற்றார் உறவினருக்காக உனது நண்பருக்காக மட்டுமல்ல தேவையில் உள்ள அனைவருக்காகவும் இதை நீ செய்வாயா?

எங்கள் பேரில்....

### 3. வீழினும் உன் கழல் விடுவேன் - இந்தியாவிருந்து தோமா

சிலுவை புதியது, அதன் பாரமும் புதியது, புதிய பயணம் பழக்கமில்லாத ஒரு பாதை. எனவே இயேசுவின் கால்கள் தடுமாறின, ஆனால் அவரது மனம் தடம் மாறவில்லை. அன்பு நண்பர்களே, நம்பிக்கையில்லாமல் அல்ல, மாறாக அன்பின் பரிமாணத்தை முழுமையாக புரிந்துக்கொள்ளாமலும் உயிர்த்த இயேசுவை காணவில்லை என்ற ஆதங்கத்தாலும், இயேசுவை மீண்டும் காண வேண்டும் என்ற ஆவலாலும் சந்தேகித்தேன். ஆனால் எனது சுயநலத்தைவிட நான் இயேசுவின்மீது கொண்ட அன்பு உண்மை என்று அறிந்த உயிர்த்த இயேசு எனக்கும் காட்சியளித்தார். அவர், அன்பின் நிறைவாக இருந்ததால், எனது குறைகளை களைந்து என்னுள் இருந்த நிறைவை கண்டார். ஆண்டவரின் அன்பு என்னுள் புதைந்திருந்த ஆழமான நம்பிக்கை "என் ஆண்டவரே! என் தேவனே!!" என்று அறிக்கையாக வெளிகொணர்ந்தது. இயேசுவின் நிறைவான அன்பு பாவத்தில் விழுந்த என்னை இறைநம்பிக்கையின் சிகரத்தை அடைய செய்தது. அன்பு அனைத்தையும் மாற்றும் என்று உணர்ந்து, நற்செய்தியை இந்தியாவில் அறிவித்து அதே நற்செய்திக்காக என்னுயிரையும் துறக்க இறையருள் உறுதியளித்தது. அன்பு நண்பரே! உனது அன்பு பிறரின் தவறுகளையும் குறைகளையும் தாண்டி, அவர்களில் உள்ள நிறைவை காண்கின்றதா? மேலும், நீ பாவத்தால் மனம் தளர்ச்சி அடையும்போது இறைவனது அன்பில் நம்பிக்கைக்கொண்டு அவரது திருபாதத்தை நாடுகின்றாயா?

எங்கள் பேரில்...

### 4. உடனிருத்தல் - எருசலேமிலிருந்து யாக்கோபு

உலகமே உன்னை வெறுத்தாலும் நான் உன்னை அன்பு செய்கிறேன். நீ என் மகன் மட்டுமல்ல இறைவனின் அன்பு மகன் என நான் அறிவேன். "துணிவோடு இரு!" "உன்னோடு நான் உடன் பயணிக்கின்றேன்!" என்றார் அன்னை மரியா. இப்படிப்பட்ட நம்பிக்கையும் துணிவும் என்னுள் இருக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு என்னை மிக முக்கியமான நேரங்களில் குறிப்பாக அவரது மாட்சி முழுமையாக வெளிப்படுத்திய நேரங்களில் அவரோடு உடனிருக்கவும் அவரின் நம்பிக்கைக்கு உகந்த சீடனாகவும் வாழ என்னை அவர் தேர்ந்தெடுத்தார். ஆனால் அவருக்கு தேவையான நேரத்தில் குறிப்பாக அவரது பாடுகளின் பயணத்தில் அவரைவிட்டு விலகி சென்றேன். நான் அவருக்கு செய்த துரோகத்தை எண்ணி குற்ற உணர்வில் இருந்த என்னை அவரது அன்பினால் மன்னிப்பளித்தார். இதன் பயனாக திருஅவையில் திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியாய் உரோமை அரசன் அஃக்ரிப்பாவின் ஆட்சியில் கழுத்தறுப்பட்டு மரித்தேன். இந்நிகழ்வு எனக்கு

இயேசுவின்மீது நான் கொண்டுள்ள அன்பினை வெளிப்படுத்த கிடைத்த வாய்ப்பு என கருதி அச்சம் தவிர்த்து துணிவு கொண்டேன். இச்செயலுக்கு முழுவலிமையைத் தந்தது இயேசுவின் உடனிருத்தலே!

அன்பு நண்பரே, நமது மனித இயல்பால், சுய நலத்தால், நமது பொருள் செல்வம் குறைந்திடும் அல்லது நற்பெயரை கறைப்படும் என்று எண்ணி, பல நேரங்களில் அயலாரோடும் உறவினர்களோடும் உடன் பயணிக்க மாறுகிறோம். மேலும், அவர்களின் துன்பமான துயரமான நேரங்களிலும் உடனிருக்க மறக்கிறோம். உறவுகளோடு உடன்பயணித்து இறையன்பை சுவைத்திடதான் நாம் படைக்கப்பட்டுள்ளோம் என்பதை மறவாதே!

எங்கள் பேரில்...

## 5. உதவி - துருக்கியிலிருந்து அந்திரேயா

திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்து இயேசுவே உண்மையான மெசியா என்றுணர்ந்த நான் அவரை எனது சகோதரர் பேதுருவுக்கு அறிமுகப்படுத்தினேன். இயேசுவே உண்மையான மெசியா என்றறிந்த நான் அவருக்கு உதவி தேவைப்படும்போது அவரது அருகில் நானில்லாமல் போனேன் என்பது உண்மையே. இருப்பினும் அவர் இறந்து உயிர்த்த பின்பு அவருக்கு சாட்சியம் பகிர எனக்கு துருக்கியில் வாய்ப்பு கிடைத்தது. ஏனென்றால் ஒருமுறை தவறுவது எதார்த்தம், ஆனால் இரண்டாம் முறை அதே தவறை செய்வது என்பது, அத்தவற்றை அறிவு தெளிவோடு தெரிவு செய்கிறோம் என்பது தான் உண்மை. எனவே மீண்டும் இயேசுவிற்கும் அவரது வாழ்வால் நமக்களித்த நற்செய்திக்கு சான்று பகர்ந்திட எனதுயிர் தேவைப்பட்டது. நற்செய்திக்கு உதவிட எனதுயிரை எக்ஸ் (ஓ) வடிவிலான சிலுவையில் துறந்திட நான் தயங்கவில்லை. ஏனென்றால், இப்படி இறப்பதன் வழியாக கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உலகெங்கும் பரவிடும் என்ற இறை உந்துதல் எனக்கு தைரியத்தை தந்தது. மேலும் இயேசுவின் அன்பு எனை ஆட்கொண்டு மன துணிவை அளித்தது. அன்பு தோழியே, தோழனே, இன்று நீ எதன் அடிப்படையில் பிறருக்கு உதவி செய்கிறாய்? உனது உதவிக்கு அன்பு அடிப்படையாக இருக்கிறதா? அல்லது சுயநலமா?

எங்கள் பேரில்....

## 6. முகப்பொலிவு - பிரிஜியாவிலிருந்து பிலிப்பு

இரத்தத்தாலும் வீதியிலுள்ள புழுதியாலும் கரைப்படிந்திருந்த இயேசுவின் முகத்தை, அவரால் ஏதோ ஒருமுறை பயனடைந்த ஒரு பெண் படைவீரர்களின் கட்டுகளை உடைத்து தன் வாழ்வையும் எண்ணாமல் ஓடிவந்து உதவினாள். இதை கேள்விப்பட்ட, நான் என் ஆண்டவரின் அருகில் இல்லாமல் போனதை எண்ணி வருந்தினேன். ஏனென்றால் அப்பங்களை பலுகி பெருகியபோது கிரேக்கர்களை இயேசுவிடம் அழைத்து வந்து அவர்களை அறிமுகம் செய்தேன். மேலும் “தந்தையை எங்களுக்கு காட்டும் அதுவே போதும்” என்றெல்லாம் அவரிடம் வீரவசனம் பேசிய நான், அவருக்கு தேவையானபோது

அவருக்கு உதவிட என்னால் இயலவில்லை என்பது உண்மையே. எனினும், கடந்த காலத்தை எண்ணி குற்ற உணர்வோடு நின்று விடாமல் உயிர்த்த இயேசுவின் மன்னிப்பையும் எல்லையற்ற அன்பையும் பெற்றவனாய் தற்போதைய தெற்கு ரஷ்யாவிற்கு சென்று இயேசுவின் மகிமை நிறைந்த அன்பொழுகும் முகமான அவரது வாழ்வு தரும் வார்த்தையை எனது நற்செயல்கள் மூலமும், வாழ்வின் மூலமும் அறிவித்தேன். அதற்கு பரிசாக கசையடிகள், சிறை தண்டனை, இறுதியாக கி.பி 54-ஆம் ஆண்டு சிலுவை மரணம் கிடைத்தது. இவை அனைத்தையும் அன்பின் பரிசாக ஏற்றுக்கொண்டேன். அன்பு தோழனே, தோழியே, இயேசுவின் திருமுகத்தை உனது வாழ்வின் மூலம் புதுபொலிவுடன் பிறருக்கு எடுத்துரைக்க நீ என்ன செய்கிறாய்?

எங்கள் பேரில்...

## 7. தளர்ச்சி - யூதாசு இஸ்காரியோத்து

இயேசுவை 30 வெள்ளி காசுகளுக்கு காட்டிக் கொடுத்த பாவி நான்தான். ஆனால் நீங்கள் அனைவரும் எனது செயலுக்காகத்தான் என்னை வெறுக்கின்றீர்கள். ஆனால் எனது பாவம் எனது செயலைவிட பெரியது. ஆம் என் எண்ணத்தை புரிந்தவராய் இயேசு என்னைப் பார்த்து கேட்டார் "முத்தமிட்டா மானிட மகனை காட்டிக் கொடுக்க போகிறாய்?" அதாவது கடவுளையே எனது கட்டுக்குள் வைத்திட எண்ணினேன். உங்களுக்கு விளங்குபடி சொன்னால், "என்மீது உண்மையான அன்பிருந்தால் இதை செய்யுங்கள் அல்லது இதை செய்யாதீர்கள்" என்று நீங்கள் கூறுவதைபோல் நானும் செய்தேன். இதைவிட பெரிய பாவம் என்னவென்றால், இப்படி செய்வதன் மூலம் கடவுளை ஆட்டிப்படைக்கும் கடவுளாக மாற விரும்பினேன். அடுத்த நொடியைப்பற்றி அறிய இயலா மனித அறிவைப் பயன்படுத்தி குறுக்கு வழியில் நல்லதை அடைய சுயநல அன்பினைக் கொண்டு கடவுளை உனது அடிமையாக்காதே என்றார். நண்பா, என்னைப் போல் அல்லவா நீயும் கீழே கிடக்கின்றாய்? என்னைவிட நீ நல்லவன், நல்லவள் என்றால் எழுந்து இயேசுவின் பாத சுவடுகளை பின்பற்று! இல்லை என்றால் என்னை காட்டிலும் நீ எவ்வகையில் நல்லவனாக அல்லது நல்லவளாக வாழ்கிறாய்?

எங்கள் பேரில்...

## 8. ஆறுதல் - எத்தியோப்பாவிலிருந்து மத்தேயு

என் வாழ்வின் தொடக்கத்திலே நான் பொருள் செல்வத்தின் பிடியில் இருந்தவன். இயேசுவின் அழைப்பு என் வாழ்க்கையை மாற்றியது. இருப்பினும் எனது மனமாற்றம் சோதனை காலத்தில் என் உண்மையான நிலையை காட்டியது. ஆம்! இயேசு மிகுந்த வேதனையுடன் கல்வாரிக்கு சிலுவையை சுமந்து சென்றபோது, அவருக்கு ஆறுதல் சொல்லக் கூட நான் அவருடன் இல்லை. ஆனால் யூத சமயத்தில் பெண்களுக்கென்று உரிமைகள் இல்லை என்றாலும் அவர்கள் தங்களது இயலாமையிலும் இயேசுவுக்கு தங்களின் கண்ணீர் மூலம் ஆறுதல் கூறினர். இறைவனின் மன்னிப்பு மீண்டும் எனக்கு

கிடைத்தபோது உலகில் உள்ள அனைவரின் துன்பமான நேரங்களில் ஆறுதல் பெற வேண்டுமென ஆண்டவரின் வார்த்தையை மடலாக எழுத துணிந்தேன். இறைவனின் அருளாலும் தூய ஆவியாரின் உந்துதலாலும் உலகம் அழியும் காலம் வரை வாழ்வு தரும் ஆறுதல் தரும் ஆண்டவரின் வார்த்தைகளை எழுதி வைக்கும் பாக்கியம் பெற்றேன். மேலும், பெர்சியா, பார்த்தியா, எத்தியோப்பியா போன்ற பகுதிகளில் நற்செய்தி அறிவித்தேன். பின்னர் எத்தியோப்பியாவில் நற்செய்தி அறிவிக்கும்போது கல்லால் எறிந்து கொல்லப்பட்டேன். இது இறைவன் எனக்களித்த பல நற்பேறுகளில் இதையும் ஒன்றாக கருதுகிறேன். என் நண்பா, ஆறுதல் வெறும் சொற்களல்ல. மாறாக, உனது உடனிருத்தல், கனிவான பார்வை, இரக்கம் நிறைந்த தொடுதல், பிறரின் துன்பங்களை இரக்கத்துடன் கவனித்தல் போன்றவைகளிலும் வெளிப்படுத்தலாம். இவ்வாறு எவ்வகையில் உனது பிரசன்னம் உனது அயலாருக்கு ஆறுதலை அளித்துள்ளது?

எங்கள் பேரில்....

## 9. மூன்றாம் முறை - உரோமிலிருந்து பேதுரு

யூதாசை காட்டிலும் நான் செய்தது மிகவும் கொடிய செயல். ஆம்! அவரோடு சாவேன் என்று சொன்னேன். ஆனால் எனது பலவீனத்தை ஆண்டவர் என்னிடம் எடுத்துச்சொல்லி என்னை எச்சரித்தும் நான் அவரை மும்முறை மறுதலித்தேன். ஆண்டவர் மும்முறை இம்மண்ணில் விழுந்தது அவரது உடல் வலுகுறைவினால். ஆனால் என்னிலோ எனது உள்ளத்தின் கோழைத்தனத்தாலும் சுய நலத்தாலும் என்னுயிரை காத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தாலும் தவறி பாவம் செய்தேன். எனது பாவங்களை காட்டிலும் ஆண்டவரின் எல்லையற்ற அன்பும் நிபந்தனையற்ற மன்னிப்பும் என்னை மீண்டும் எழச்செய்தது. தகுதியில்லா என்னை திருஅவையின் தலைவராக நியமித்தார். ஆனால் என்னுள்ளிருந்து செயலாற்றியது எல்லாம் ஆண்டவரே. திருஅவையின் தலைவர் என்பதைவிட நான் ஆண்டவரின் சீடர் என்பதே எனக்கு வலிமையும் பெறுமையும். குருவை மிஞ்சிய சீடர் இருக்க முடியாது. நான் எனது மரணத்திலும் எனது குருவைப்போல் மரிக்க விரும்பவில்லை. எனவேதான், என்னை தலைகீழாக சிலுவையில் அறைய சொன்னேன். இதோ இன்றும் என்றும் இயேசுவின் சீடனாக அவரின் எல்லையற்ற அன்பிற்கும், நிபந்தனையற்ற மன்னிப்பிற்கும் அவரின் திருஅவையின் தலைவராக அதாவது இறையடியார்களுக்கு எல்லாம் பணியாளனாக பணி செய்கிறேன். ஏனென்றால் தலைவனாக இருக்க விரும்புகிறவன் பணியாளனாய் இருக்கட்டும். என் அன்புள்ள தோழியே, தோழனே, கடவுளின் எல்லையற்ற அன்பிலும் நிபந்தனையற்ற மன்னிப்பிலும் நம்பிக்கைக் கொண்டு அவர் உனக்களித்த பொறுப்புக்களை மனமகிழ்வோடு கடமை தவறாமல் செய்கிறாயா? அப்படி தவறுகின்றபோது அவரது அன்பையும் மன்னிப்பையும் உடனே இறைநம்பிக்கையுடன் நாடுகின்றாயா?

எங்கள் பேரில் .....

## 10. ஆடையின்றி - பெர்சியாவிலிருந்து யூதா ததேயு

கைவிடப்பட்டோர், அனாதைகள், முதியோர்கள், மேலும் நிறைவேறாத காரியங்கள் நிறைவேற்றும் பாதுகாவலர் என்றும் என்னை திருஅவை அறிவித்துள்ளது. ஆனால் உண்மையில் நான் ஆண்டவரின் உடலில் இருந்து அவரது ஆடைகளை அகற்றிய போது அவரைவிட்டு ஓடியவன். ஆம்! நான் கொடிய வேதனைகளை ஆண்டவர் அனுபவித்தபோது அவரின் அருகில் இல்லாத பாவி. இருப்பினும் இந்த பாவியின் பலவீனத்தை புரிந்துக்கொண்டு உண்மையான அவமானம் என்பது, "நான் யார்? என்று அறியாமலும்", "எதற்காக நான் படைக்கப்பட்டேன்?" "ஏதை நோக்கி பயணக்கின்றேன்?" என்ற வினாக்களுக்கு பதில் தேடாமல், அழிந்து போகும் பொருள் செல்வத்தின் பின்பும், புகழின் பின்பும், தேவையற்ற ஆடம்பர வாழ்வின் பின்பும் செல்வதே அவமானம். மனித வாழ்வினை அர்த்தமுள்ள வகையில் வாழ்ந்து பல்லுயிர் வாழ தன்னால் இயன்றவற்றை தன்னடக்கத்துடன் செய்வதில்தான் மாண்பும் மதிப்பும் உள்ளது. இவ்வுண்மைகளை நான் இயேசு எனக்களித்த மன்னிப்பில் உணர்ந்தவனாய் அவரின் அன்பையும் மன்னிப்பையும் பல்லுயிர் பலனடைய எடுத்துரைக்க எடேசா மற்றும் பெர்சியா நாடுகளில் நற்செய்தி அறிவித்தேன். பெர்சியாவில் நற்செய்தியை அறிவிக்கும் வேளையில் அம்புகள் எய்து என்னைக் கொன்றனர். அம்புகள் என் உடலை துளைத்தபோது நான் அடைந்த வலியை தாங்கிக் கொள்ள ஆண்டவரின் அருளும் சக்தியும் எனக்கு வலிமை தந்தது. அவரின் அருளின்றி என்னால் அந்த மரணத்தை எதிர்கொண்டிருக்க இயலாது. ஆம், என் அன்பு நண்பனே, இன்று உனது மதிப்பும் மானமும் எதில் இருக்கிறது என்று, எதை நோக்கி பயணிக்கின்றாய்? எல்லாம் இருந்தும் நிர்வாணமாய் நிற்க ஏன் இந்த போராட்டம்?

எங்கள் பேரில்...

## 11. மூன்று ஆணிகளுக்கிடையே - பெர்சியாவிலிருந்து தீவிரவாதி என்றழைக்கப்பட்ட சீமோன்

மூன்று என்பது விவிலிய மொழிகளில் முழுமையை குறிக்கும். இதனால்தான் என்னவோ இறுதியில் ஆண்டவரின் உடல் மூன்று ஆணிகளில் அடங்கியதோ? சொல்லொன்ன துயரம் அவரை மேலிட்டது என்று அன்னை மரியாள் எங்களிடம் கூறினார்கள். அவரின் வேதனையை மனித வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது என்பது உண்மையே. மரணத்திற்கு போராடும் இறுதி வேளையில் கூட நான் அவரோடு இல்லை. ஆனால் என் ஆண்டவரோ என்னோடு எந்நாளும் இருந்தார். அவரின் அன்பினால் என்னை பாதுக்காத்து நான் இருளில் நடக்கின்றபோது ஒளியாகவும், வேதனையில் ஆறுதலாகவும் சோதனைகளை சந்திக்க தேவையான துணிவைத் தந்தார். இவ்வாறு நாம் வாழ தன்னுயிரை நமக்காக மூன்று ஆணிகளுக்கிடையே தியாகம் செய்த என் ஆண்டவருக்காக நான் எதைத் தருவேன்? இதோ அவர் எனக்களித்த மன்னிப்பையும் அன்பையும் உலகின் கடை எல்லைவரை எடுத்துரைக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் முதலில் தெற்கு ஆப்ரிக்காவிற்கும், பின் பிரிட்டனுக்கும் இறுதியில் பெர்சியாவிற்கும் சென்றேன். இவ்வாறு நான் பெர்சியாவில் நற்செய்தியை அறிவிக்கும்

வேளையில் எனை ஒரு சிலர் பிடித்து எனது உடலை இரம்பத்தால் இரண்டாக அறுத்தனர். ஆண்டவர் மூன்று மணி நேரம் சிலுவையில் அனுபவித்த வேதனையோடு என் வேதனையை ஒப்பிடும்போது எனது வேதனை ஒன்றுமில்லை. என்னைப்பற்றி முழுமையாக அறிந்த இறைவன் அவர் அதனால் தான் எனது மரணத்தை கூட எளிமையாக்கிவிட்டார். அந்த அளவிற்கு அவர் என்னை அன்பு செய்தார். நண்பா, தியாகத்தின் வழியாகத்தான் அன்பு வெளிப்படும் என்பதை உணர்ந்துக்கொள். தியாகம் செய்ய வாய்ப்பு வரும்போது தயங்காதே! ஏனென்றால் வாய்ப்புகள் ஒருமுறை மட்டும்தான் வரும். வாய்ப்புள்ளபோது தியாகம் செய்து உன் அன்பை வெளிப்படுத்து. இறைவனில் இணைந்திடு.

எங்கள் பேரில்....

## 12. மரணம் - இயேசு அன்புக்கொண்டிருந்த சீடர் யோவான்

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு இல்லை" என்றும், "நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன்.... உங்களை நான் நண்பர்கள் என்றேன்." இவ்வார்த்தைகள் கல்வாரியில் உயிர்பெற்றது. அவரோடு இருந்த மற்றவர்கள் விலகினாலும் அவரோடு அவரது அருகில் அதுவும் சிலுவையின் அடியில் நிற்கும் பேறுபெற்றேன். ஆண்டவரின் முகத்தில் வேதனையின் வலியின் சாயல்கள் தெரிந்தது. ஆனால் ஒருபோதும் வெறுப்போ, மனக்கசப்போ, விரக்தியோ, பயமோ இவைகள் எதையும் நான் காணவில்லை. ஆம். அவரின் மரணவலியிலும் இறப்பிலும் வெற்றி வீரனைப் போல் தனது ஆவியை தந்தையின் கையில் பலிப்பொருளாக ஒப்புக் கொடுத்தார். வாழ்வின் எந்த நிலையிலும் அவர் மாண்புடனும் மகத்துவத்துடனும் இருந்தார். இதுதான் அன்பின் முழுமை என புரிந்துக்கொண்டேன். தனது உயிரை கடவுளுக்கென ஒப்புக்கொடுக்கும்முன், அவரிடமிருந்த ஒரே சொத்து அவரின் அன்னை. அவரையும் நாம் வாழ நமக்காய் கொடையாக கொடுத்தார். அவரது அன்பை சொல்ல எனக்கு வார்த்தைகள் வரவில்லை, மாறாக கண்களில் கண்ணீரும் மௌனம் மேலிட்டவனாய் மெய்சிலிர்த்து வார்த்தைகளை தேடுகின்றேன் என் உணர்வுகளை உங்களுக்கு எடுத்துரைக்க. ஆம், "அன்பே கடவுள், கடவுளே அன்பு". அன்பின் முழுமை நமக்காய் சிலுவையில் அடிமையாய், நிர்வாணமாய் காட்சித் தருகின்றது. இதுவல்லவா அன்பு! நண்பா, அன்பிற்காக நீ எதை ஈடாகத் தருவாய்?

எங்கள் பேரில்....

## 13. மடியில் இயேசு - சிரியாவிலிருந்து மத்தியாஸ்

"இதோ ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே ஆகட்டும்" என்று, என்றோ சொன்ன வார்த்தைகளுக்காக பல நிகழ்வுகளை முழுமையாய் புரிந்துக்கொள்ள முடியாமல் அனைத்தையும் தனது மனதில் இருத்தி தியானித்தவளின் நிலை சிலுவையின் அடியில் உயிரற்ற தனது மகனின் உடலை மடியில் கிடத்தியவளாய் மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தாள்.

அவளின் நிலையை எண்ணிப்பார்ப்பதற்கே இயலவில்லை. எந்த தாயிக்கும் இந்நிலை வரக்கூடாது. ஆம்! இருப்பினும் அவளை நாம் பெண்களுக்குள் பேறுபெற்றவள் என்றழைக்கின்றோம். பேறுபெற்ற நிலைக்கு வர இப்படிப்பட்ட துன்ப துயரங்களை அனுபவிக்க வேண்டுமா? இறைவனின் திட்டத்திற்கு. "ஆம்" என்று சொன்னால் இதுதான் நிலையா? நடந்த அனைத்தையும் கண்ட சாட்சி நான். ஆண்டவரால் அவரின் மண்ணக வாழ்வின்போது அழைக்கப்படவில்லை என்றாலும் அவரது சீடர்களுள் ஒருவராக வாழ யூதாசுக்கு பதிலாக எனை தேர்ந்தெடுத்தபோது எனக்கும் ஆண்டவரைப்போல் துன்பங்கள் பல நிகழும். இருப்பினும் வருத்தம் வேண்டாம் என்று அன்னை மரியாளின் உடனிருப்பு சொல்லியது. அன்னை மரியாள் இறைவனின் வார்த்தையை தன் உதிரத்தில் கருத்தரிக்கும் முன்பே அவரது வார்த்தையை உள்ளத்தில் கருத்தரித்ததால் எச்சூழலும் அவரை இறைவனின் அன்பிலிருந்து பிரிக்க இயலவில்லை. அவரின் வாழ்விலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தால் நானும் சிரியாவில் இறைவனின் அருளால் இயேசுவுக்காகவும் அவரின் நற்செய்திக்காகவும் உயிரோடு என்னை தீயில் எரித்தபோது வருந்தவில்லை, மாறாக அகமகிழ்ந்தேன். அன்னை மரியாவை நினைவில் கொண்டு ஆண்டவருக்கும் அவரது வார்த்தைகளுக்கும் நம்பிக்கையுடன் இருக்க வாய்ப்பு கிடைத்ததை நினைத்து மகிழ்ந்தேன். என் அன்பு தோழியே, தோழனே! நீ அனைத்தையும் இழந்தாலும் இறைவனை பற்றுடன் பற்றிக்கொள்வாயா? ஆண்டவரை சிக்கெனப் பிடித்துக் கொள்வாயா?

எங்கள் பேரில்...

## 14. கல்லறை - உரோமிலிருந்து பவுல்

கிறிஸ்தவர்களை வேரருக்க வேண்டுமென்று தான் குதிரையில் விரைந்தேன். என்னைப் போல்தான் அன்று ஆட்சியில் இருந்த உரோமை மன்னனும் யூத மத தலைவர்களும் இயேசுவின் இறப்போடு எல்லாம் முடிந்தது என எண்ணினர். ஆனால் எல்லாம் அழிந்தாலும் அன்பு அழியாது. அன்பிற்கு அழிவே இல்லை என்பதை அவர்கள் அறியவில்லை. அன்பிற்கு அழிவில்லை என நானும் அறியாத தருணத்தில் கிறிஸ்துவை பின்பற்றியவர்களை அழிக்க முயன்றேன். ஆனால் நானும் அன்பின் தீச்சுவாலையால் ஆட்கொள்ளப்பட்டு, "வாழ்ந்தாலும் இறந்தாலும் அது இயேசுவிற்காகவே" என்று எனது வாழ்வின் பாதையை மாற்றிக்கொண்டேன். மாற்றிக்கொண்டதோடு நில்லாமல் இயேசுவிற்காகவும் அவரது அன்பிற்காகவும் என்னுயிரையும் துறக்க முன்வந்தேன். என்னுயிரை துறப்பதற்கு முன்பாக என்னால் இயன்ற வரையில் எல்லா நிலையினருக்கும் அவர்கள் நிலைக்கு சென்று இயேசுவையும் அவரின் அன்பையும் பறைசாற்றினேன். இதற்காக எனக்கு அளிக்கபட்ட பரிசு, தலை வெட்டுண்டு சாவது. உரோமை நகருக்கு வெளியே இந்த பரிசு வழங்கப்பட்டது. நான் இறந்துவிட்டேன் ஆனால் கடவுளின் அன்பு இன்றும் இம்மண்ணில் பரவுவதை யாரால் தடுக்க முடியும்? அன்பிற்கு கல்லறையும் கருவறையே. என் நண்பா, அன்பிற்கு அழிவே இல்லை என்று நீ அறிந்தும் அதற்கு சாட்சியம் பகிர தடையாக இருப்பது எது?

## முடிவுரை

அன்பு தோழியே, தோழனே! இன்றுவரை இயேசுவுக்காகவும் அவரின் நற்செய்திக்காகவும் அவர் சென்ற பாதையை பின்பற்றி தங்கள் உயிரை துறந்தவர் பலர். அவர்கள் அனைவரும் அன்பில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் ஆளும் வர்க்கத்திற்கு பயந்து அவர்களுக்கு துணைச் சென்ற அனைவரும் அடையாளம் இழந்து பலரில் ஒருவராக வாழ்ந்தற்கான இடமே தெரியாமல் பேய்விட்டனர். நீ யாரோடு சேர்ந்து உன் பயணத்தை தொடர போகிறாய்?





கன்னி மரியாவின் கணவர்

# புனித யோசேப்பு

## வாழ்க்கை வரலாறு

*திரு. விக்டர்*

அன்பார்ந்தவர்களே, நமது கத்தோலிக்கத் திருஅவை மார்ச் 19ஆம் நாளன்று கன்னி மரியாவின் கணவரான புனித யோசேப்பு பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. விவிலியத்தில் ஒரு வார்த்தைக்கூட பேசாமல் மாபெரும் செயல்களைச் செய்தவர் புனித யோசேப்பு. கடவுளின் திட்டத்தில் யோசேப்பு மிகுந்த முக்கியத்துவம் பெற்றவர் என்பது இறையியல் அறிஞர்களின் ஒப்புதல். இத்தகைய நம்பிக்கையின் காரணமாகவே, திருஅவையும் அவருக்குப் பெருவிழா எடுத்து சிறப்பிக்கின்றது. புனித யோசேப்பின் வாழ்க்கை நிகழ்வுகளைக் காட்சியாகக் கண்ட வணக்கத்திற்குரிய மரியா தெ அக்ரெதா என்ற அருட்சகோதரி (1602-1665), புனித யோசேப்பு தாயின் வயிற்றில் ஏழு மாதக் கருவாக இருந்தபோதே தூய ஆவியாரின் அருட்பொழிவைப் பெற்றார் என்று கூறுகிறார். குழந்தைப் பருவத்தில் இருந்தே யோசேப்பு புனிதமானவராக வாழ்ந்து வந்தார் என்றும், சமாதானம் ஏற்படுத்துவதில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார் என்றும் மரியா தெ அக்ரெதா விவரிக்கிறார். புனித யோசேப்பு சிறு வயது முதலே தாழ்ச்சியும் கீழ்ப்படிதலும் கொண்டவராக இருந்தார். அவரது வாழ்வு செபத்துடன் இணைந்ததாக, கடவுளுக்கு மிகவும் உகந்ததாக இருந்தது. பக்தியிலும் இறையச்சத்திலும் அவர் சிறந்து விளங்கினார். பன்னிரண்டாம் வயதில் யோசேப்பு கற்பின் வாக்குறுதியை ஏற்று கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்தார். மனிதர்கள் முன்னிலையிலும் அவர் குற்றம் காணமுடியாத தூய வாழ்வு வாழ்ந்து வந்தார்.

புனித யோசேப்பின் சிறு வயது வாழ்க்கை, நம் குடும்பத்தில் உள்ள சிறுவர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறது. சிறுவர்கள் இறைப்பற்றிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க புனித யோசேப்பு வழிகாட்டியாக இருக்கிறார். அவரைப் பின்பற்றி, கடவுளின் திருவுளத்தை அறிந்து செயல்பட செபிக்குமாறு குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும். குழந்தைகள் இறையச்சம் கொண்டு, பக்தியில் வளர அவர்களுக்கு உதவ வேண்டும். புனித யோசேப்பைப் பற்றி நற்செய்தி நூல்கள் மூன்று விவரங்களைத் தருகின்றன: அவர் கடவுளுக்கும் திருஅவைக்கும் மதிப்பளித்து நேர்மையாளராக வாழ்ந்தார், கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து கன்னி மரியாவுக்குப் பிரமாணிக்கமுள்ள கணவராக நடந்து கொண்டார், கடவுளின் திட்டத்தை ஏற்று இறைமகன் இயேசுவுக்குப் பொறுப்புள்ள தந்தையாகச் செயல்பட்டார். இவ்வாறு திருக்குடும்பத்தின் மாண்புமிகுத் தலைவராகத் திகழ்ந்தார். "திருமணத்திற்குப் புறம்பாக கருத்தாங்கும் எந்தப் பெண்ணும் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்" என்பது அக்கால யூதர்களின் சட்டமாக இருந்தது. இத்தகையச் சூழலில் தமக்கு மண ஒப்பந்தமான கன்னி மரியா கருத்தாங்கி நிற்பது யோசேப்புக்குத் தெரிய வருகிறது. யோசேப்பு சட்டத்தை மதித்த நேர்மையாளர். ஆகவே, மரியாவைத் தமது மனைவியாக ஏற்க அவரது மனம் தயங்குகிறது.

அதே நேரத்தில், யூத சமூகத்தால் மரியா கல்லெறிப்பட்டு இறப்பதையும் யோசேப்பு விரும்பவில்லை. யோசேப்பு சட்டத்தை விடவும் மனிதநேயத்தை முன்னிறுத்தியவராய், மரியாவை மறைவாக விலக்கிவிடத் திட்டமிடுகிறார். பக்தி மிகுந்தவரான யோசேப்பு, தமக்கு ஏற்பட்டக் குழப்பத்தைக் கடவுளின் பாதத்தில் அர்ப்பணித்துவிட்டு அமைதியான உறக்கத்தில் ஆழ்கிறார். கனவில் தோன்றிய வானதூதர் வழியாக அவருக்குத் தெளிவு கிடைக்கிறது. "கன்னி மரியா கருவுற்றிருப்பதற்குத் தூய ஆவியே காரணம்" என்பதை அறிந்ததும், அவரைத் தமது மனைவியாக யோசேப்பு ஏற்றுக் கொள்கிறார். புனித யோசேப்பைப் பின்பற்றி நாமும் சட்டத்தைப் புறக்கணித்து மனிதநேயத்துக்கு முதலிடம் கொடுத்தால், புதிய உறவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நமது வாழ்விலும் பல்வேறு நெருக்கடியான குழப்பமானச் சூழல்கள் வருகின்றன. அத்தகையத் தருணங்களில், நமது கவலைகளைக் கடவுளின் பாதத்தில் வைத்துவிட்டு அவர்பணி செய்ய பழக வேண்டும். அப்பொழுது, நாம் கடவுளின் திருவுளத்தை அறிந்து சரியான முடிவெடுக்க கடவுள் நமக்கு உதவி செய்வார் என்பதை புனித யோசேப்பு நமக்குக் கற்றுத் தருகிறார். நேர்மையாளரான புனித யோசேப்பு, கன்னி மரியாவை மனைவியாக ஏற்றதும் தமது வேலை முடிந்தது என்று அமைதியாக இருந்துவிடவில்லை. கணவருக்குரியப் பொறுப்புகளை உணர்ந்து, கருத்தாங்கி இருந்த கன்னி மரியாவுக்குத் தேவையான அனைத்து பணிவிடைகளும் செய்தார். கடவுளின் திட்டம் நிறைவேறுமாறு, கன்னி மரியாவைக் கோவேறு கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு யோசேப்பு நாசரேத்தில் இருந்து பெத்லகேமுக்கு நடந்தே சென்றார். இறைமகனைக் கருத்தாங்கியிருந்த மரியா தங்குவதற்குப் பெத்லகேமில் விடுதி எதுவும் கிடைக்காத நிலையில், ஒரு மாட்டுத் தொழுவத்தை வசதியான தங்குமிடமாக மாற்றிக் கொடுத்தவர் யோசேப்பு. கன்னி மரியாவுக்கு முன்பாகவே, தந்தை

என்ற முறையில் குழந்தை இயேசுவைக் கரங்களில் ஏந்தும் பேற்றினை புனித யோசேப்பு பெற்றார். கடவுளின் திட்டத்தை நிறைவேற்றியதற்குக் கிடைத்தப் பரிசு அது. மனிதராகத் தோன்றிய இறைமகனுக்கு "இயேசு" என்று பெயரிட்ட வேளையில், திருச்சட்டத்தின்படி அவரது தந்தையானார் யோசேப்பு. எருசலேம் கோவிலில் தூய்மைச்சடங்கை நிறைவேற்றிய வேளையில், கன்னி மரியாவுக்குப் பொருத்தமானத் துணைவராக யோசேப்பு தெரிகிறார். குழந்தை இயேசுவைக் கொல்ல ஏரோது தேடிய வேளையில், மரியாவையும் இயேசுவையும் அழைத்துக்கொண்டு எகிப்தில் அடைக்கலம் புகுந்த யோசேப்பில் பொறுப்புள்ள கணவரைக் காண்கிறோம். ஒரு குடும்பத் தலைவர் எப்படி தமது மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வை புனித யோசேப்பிடமிருந்து நாம் கற்க வேண்டும். தமது வாரிசை மரியா வயிற்றில் சுமக்கவில்லை என்றாலும், கன்னிமரியா மீது புனித யோசேப்பு காட்டிய அன்பும் அக்கறையும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. மரியாவும் யோசேப்பின் சொல் கேட்டு அவருக்கு உகந்த குடும்பத் தலைவியாக இருந்தார் என்பது உண்மை. ஆனால் மரியாவின் மகனான இயேசுவைக் காப்பாற்ற யோசேப்பு மேற்கொண்ட முயற்சிகள், அவரது பெருந்தன்மையையும் இறைத்திட்டத்திற்குக் கீழ்ப்படியும் மனதையும் காட்டுகின்றன. இறைமகன் இயேசுவின் இவ்வுலகத் தந்தை என்ற முறையில், இயேசு ஞானத்திலும் அறிவிலும் வளர யோசேப்பு துணையாக இருந்தார். பன்னிரு வயதில் எருசலேம் கோவிலில் தங்கிவிட்ட இயேசு, மறைநூல் அறிஞர்களையும் வியக்கச் செய்யும் அளவுக்குப் பேசியதில் யோசேப்பின் பங்கும் இருந்தது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இயேசுவைக் காணாமல் துடித்த கன்னி மரியாவுக்கு உறுதுணையாக, அவரைத் தேடியலைந்த புனித யோசேப்பில் பொறுப்புள்ள தந்தையைக் காண்கிறோம். "நம் ஆண்டவரைத் தூக்கிச் சுமக்கும் அருளையும் பெரும் பேற்றையும் யோசேப்பு பெற்றிருந்தார். மனிதராகத் தோன்றியத் தம் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவுக்கு கல்வி கற்பிக்க, கடவுள் தேர்ந்தெடுத்த யோசேப்பு எவ்வளவு பாராட்டுக்குரியவர்" என்று புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் வியந்து போற்றுகிறார். "இயேசு அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து, அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவர் ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:51,52) என்று நற்செய்தியாளர் கூறுவதில் ஆழ்ந்த பொருள் உள்ளது. "இவர் தச்சருடைய மகன் அல்லவா?" (மத் 13:55), "இவர் தச்சர் அல்லவா" (மாற்கு 6:3) என்னும் கூற்றுகள், இயேசுவின் வாழ்விலும் நாசரேத்திலும் யோசேப்பு ஏற்படுத்திய தாக்கத்தைப் பறைசாற்றுகின்றன. இவ்வாறு கடவுளின் திருவுளத்தை அறிந்து நடக்கும் குழந்தை உள்ளம் கொண்டவராகவும், பொறுப்புள்ள குடும்பத் தலைவராகவும், அன்பு நிறைந்த தந்தையாகவும் செயல்படுவது எப்படி என்பதற்கு புனித யோசேப்பு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறார். குடும்பங்களின் பாதுகாவலரான அவர், நமது குடும்பங்கள் கடவுளுக்கு உகந்தவையாக வாழ உதவுமாறு மன்றாடுவோம். புனித யோசேப்பின் முன்மாதிரியைப் பின்பற்றி, நமது குடும்பங்களையும் திருக்குடும்பங்களாக மாற்ற உறுதியேற்போம்.



# குருத்து ஞாயிறு

## தரும் செய்தி என்ன?

*திரு. ஜான் அலெக்ஸ்*

குருத்து ஞாயிறு -பாடுகளின் ஞாயிறு. புனித வாரத்திற்கு தொடக்கமாக அமைகிறது. திருஅவையின் வரலாற்றில், ஒரு வாரமே புனித வாரமாக கொண்டாடப்படுகிறது என்றால் கிறிஸ்துவின் பிறப்பை விட அவரது பாடுகளும், இறப்பும், உயிர்ப்பும், எவ்வாறு முக்கியம் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அறிந்துணர வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிநாதமான "கெரிக்மா" என்றழைக்கப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், இவ்வாரத்தில் ஆழமாக உயிர்ப்பு நினைவுகூரப்படுகிறது.

கி.பி 5ஆம் நூற்றாண்டில் எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் நண்பகல் வேளையில் "ஒலிவில்" என்ற மலையில் கூடிச் செபித்து, பிறகு மாலை வேளையில் கையில் குருத்தோலைகளையும், ஒலிவக் கிளைகளையும் ஏந்தி பவனியாக எருசலேம் ஆலயத்திற்குச் செல்வது வழக்கம். இதையே குருத்து ஞாயிறாக திருச்சபை கொண்டாடி வருகின்றது. கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து ஒலிவக்கிளைகளையும் குருத்தோலைகளையும், புனிதப்படுத்தும் பழக்கம் தோன்றியது. குருத்தோலையானது செந்நிற மற்றும் நம்பிக்கையின் அடையாளம். ஒலிவக்கிளையானது மருத்துவக் குணம் கொண்டதாகவும் நிறைவின் அடையாளமாகவும் விளங்குகின்றது. இயேசுக் கிறிஸ்து நம் வாழ்வில் வெற்றியைத் தருபவராகவும், நம்பிக்கை அளிப்பவராகவும், வாழ்வின் நிறைவாகவும் இருப்பதால் தொடக்கக்கால கிறிஸ்தவர்கள் வெளி அடையாளமாக குருத்தோலை மற்றும் ஒலிவக்

கிளைகளை பவனியில் எடுத்துச் சென்றார்கள். அதையே நாமும் இன்று பின்பற்றுகிறோம்.

**ஒலிவக் கிளைகள் :** நோவா காலத்து வெள்ளப்பெருக்கு, பூமியின் முகத்தைப் புதுப்பித்து புதுப்படைப்பாக அனைத்தையும், உருமாற்றியது. இனி அழிவு இல்லை என்ற நம்பிக்கையை கொண்டு வந்த புறா ஒலிவ மரத்தின் கிளை ஒன்றை அலகில் கௌவிக் கொண்டு வந்தது. (தொ.நூ 8:11)அழிவிற்கு உட்பட்டிருந்த படைப்பு இனி விடுதலைக்கு கடந்து செல்ல இதோ இயேசுவின் தலைமையில் புறப்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையை முழக்கமிடும் பவனி இது. ஒலிவ மரம் தேவர்களும், மனிதர்களும் பயன்படுத்தும் செழுமையான மரம். இறையரசின் செழுமை, வளமை, முழுமையை முன்னறிவிக்கிறது. உயிர்ப்பு விழாவுக்கு முன் ஒரு விழா.

**“என்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதே எனது பணி” :** எனது வாழ்க்கையில் என்ன நடந்தாலும், எது நடந்தாலும், எப்படி நடந்தாலும் தந்தையின் விருப்பப்படி தான் நடக்கிறது என்பதை உணர்ந்து அவரின் திருவுளத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வாழும் வாழ்வு தான் விசுவாச வாழ்வு. அப்படிப்பட்ட விசுவாச வாழ்வை வாழ்ந்து காட்டிய இயேசுவின் ஆடம்பர எருசலேம் நுழைவு விழாவைத் தான் குருத்து ஞாயிறு விழாவாகக் கொண்டாடுகின்றோம். புனித வாரத்தின் நுழைவாயில் குருத்து ஞாயிறு. தவக்காலத்தின் உச்சக்கட்டம். திருப்பாடுகளின் தொடக்கம்.

**இயேசுவின் பயணங்கள் :** பெத்லகேமில் ஏரோதுவின் மிரட்டலுக்கும், அதிகாரத்திற்கும், பணிந்து எகிப்துக்கு தப்பியோடி, இறுதியாக நாசரேத்தூரில் குடியமர்ந்தது வரை கிறிஸ்து மேற்கொண்டது வாழ்க்கைப் பயணம். பன்னிரு வயதில் எருசலேம் ஆலயத்தில் காணாமற் போனதோடு அவரது வாழ்க்கைப் பயணம் முடிவுக்கு வருகிறது. அவர் தனது திருக்குடும்பத்துடன் மேற்கொண்ட பயணம். பாலைவனத்திற்கு மேற்கொண்டது

**இரண்டாவது பயணம்.** தனது இறையரசின் பணிக்கான பயணம். இது சீடர்கள், அப்போஸ்தலர்கள், புடைசூழ நடைபெற்ற இறையாட்சிக்கான பயணம் கலிலேயா, யூதேயா, சமாரியா என எப்பக்கமும் விரிவடைந்த பயணம்.

**மூன்றாவதாக :** எருசலேமிற்குள்ளான பயணம். இப்பயணம் பலர் வாழ்வு பெறுவதற்காக தம்மையே தந்தையின் திருவுளத்திற்கு கையளிப்பதற்கான மரணப் பயணம். பலியான பயணம். தனியொரு விதையாக வீரியமுடன் மேற்கொள்கிற பயணம். இது கல்வாரியில் தான் முடிவடையும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தவர் இது ஒரு புனிதமான பயணம்.இயேசுவின் முதல் பயணம் நாட்டிற்கு வெளியே, இரண்டாவது பயணம் நாட்டிற்குள்ளே, மூன்றாவது பயணம் கல்லறைக்குள்ளே. இன்று எருசலேமில் குழுமியிருந்த மக்களின் கைகளில் குருத்தோலைகள் என்றால் நம் தோளில் சிலுவை தான். பயணத்தின் தரைகளில் துணி என்றால் பாடுகளின் போது நிர்வாணம். இன்று ஓசான்னா என்றால் நாளை முள் முடியும் கசையடியும் என்பதை அவர்

நன்கறிந்திருந்தார். ஆனாலும் மானுடத்தை மீட்க தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற அனைவருக்கும் நிறை வாழ்வினை வழங்க பாடுகளின் பாதையை ஓர் இலட்சிய பாதையாக மேற்கொள்கிறார். இந்தப் பாதைக்கான முதல் படிதான் குருத்து ஞாயிறு.

- ஒவ்வொருவரின் துயரத்தில் பங்கெடுக்காமல் எனக்கென்ன என்று தூங்கி சுகம் காண்பவர்களும் (மாற்கு 14:32-43)
- முப்பது வெள்ளிக்காசுக்கு முத்தமிட்டு காட்டி கொடுப்பவர்களும்
- அவரை எனக்கு தெரியாது என்று மறுதலிப்பவர்களும்
- தங்கள் மேலாடையைப் பற்றிக் கூட கவலைப்படாமல் தப்பித்தால் போதும் என்று ஓடும் சீடர்களும்
- அவரை நிர்வாணப்படுத்தியே தீர வேண்டும் என்பதற்காக தங்கள் மேலாடையைக் கிழித்துக் கொண்டவர்களும்
- முகத்தை மூடி நையப்புடைத்து, அடித்து "உன்னை அடித்தவன் யார்?" என்று பரிகாசம் செய்பவர்களும்
- பளபளப்பான ஆடை உடுத்தி பரிகாசம் செய்பவர்களும்.
- பரபாசே வேண்டும் என்று பாசாங்கு செய்பவர்களும்
- சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூவுபவர்களும்
- காரி உமிழ்பவர்களும்
- கன்னத்தில் அறைபவர்களும்
- கசையால் அடிப்பவர்களும்
- யூதரின் அரசே வாழி என்று ஏளனம் செய்பவர்களும்
- கைகளை கழுபவர்களும்
- உன்னையே காப்பாற்றிக் கொள் என்று நகைப்பவர்களும்
- கசந்த திராட்சை இரசத்தை குடிக்க கட்டாயப்படுத்துபவர்களும்
- ஒரு மனிதனின் நிர்வாணத்தைப் பற்றி கவலைப்படாமல் அவனது ஆடையை குலுக்கல் போட்டு பங்கிட்டுக் கொள்ளும் சுயநலக்காரர்களும்
- சிலுவையில் அறைபவர்களும்
- நீ மெசியாவானால் நம்மை காப்பாற்று என பழித்துரைப்பவர்களும் இறந்த பிறகும் விலாவில் ஊடுறுவக் குத்துபவர்களும்
- கையூட்டுக் கொடுத்து தவறான பரப்புரையை மேற்கொள்பவர்களும்,
- இவர்களை இயேசு தனது பயணத்தில் சந்தித்தார். இவர்களெல்லாரும் சூளையை மறுக்கும் செங்கற்கள்.

இவர்கள் மட்டுமல்ல இயேசுவின் பயணத்தில் சொற்ப எண்ணிக்கையாளர்கள் அவரை ஆதரிக்கவும், துணை நிற்பவர்களாகவும் இருந்தார்கள்.

- இதோ உமது அடிமை என்று இறுதிவரை நின்ற அன்னை மரியா
- கட்டாயப்படுத்தப்பட்டதால் இறுதிவரை சிலுவை சுமந்த சீமோன்
- அநீதியைக் கண்டு, மாரடித்துப் புலம்பி குரலெழுப்பிய பெண்கள்
- என்னை நினைவிற் கொள்ளும் என்று சரணாகதி அடையும் நல்ல கள்வன்.
- இம்மனிதர் உண்மையாகவே இறைமகன் என்று விசுவாசத்தை வெளிப்படுத்தும் நூற்றுவத் தலைவன்

**குருத்தோலை பவனி :** குருத்தோலை வெற்றியின் அடையாளம், தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் கல்லறைகளில் எதற்காக? கிறிஸ்து சாவின் மீது வெற்றிக் கொண்டு உயிர்த்தது போல, இவர்களும் உயிர்க்கப்பட வேண்டும் என்பதற்கான அடையாளமாகத்தான். குருத்தோலை உயர்ந்து நிற்பது போல, நம் இதயங்களும், எண்ணங்களும், உயரனும் என்பதை வெளிப்படுத்தத்தான் குருத்தோலை பவனி.

**கழுதை மேல் பவனி :** பாலஸ்தீன நாட்டில் கழுதைக்கு சிறப்பான முக்கியத்துவம் உண்டு. போர்க்காலங்களில் குதிரைகளை பயன்படுத்திய அரசர்கள் போர் முடிந்து அமைதியான நாட்களிலே கழுதை மீது பவனி வந்தார்கள். கழுதை அமைதி சாந்தம் சமாதானத்தின் சின்னம். இயேசு சாந்தத்தின் உருவாக அமைதியின் அரசராக, சமாதானத்தின் தூதுவராக துன்புறும் ஊழியனாக தம்மையே தாழ்த்தி அரசராக கழுதையின் மீது அமர்ந்து எருசலேம் வருகிறார்.

- புதிய கல்லறையை தியாகம் செய்த அரிமத்தியா சூசை
- வெள்ளைப் போளமும் சந்தனத் குமிழும் கொணர்ந்த நிக்கதேமு
- மகதலா மரியா, மரியா, சலோமி என ஒரு சில பெண்கள் (நறுமணப் பொருட்கள் பூசியவர்கள்)

இவர்கள் எல்லோரும் இயேசு செய்த மூன்றாவது பயணமாக மரணப் பயணத்தில் சந்தித்தவர்கள். இவை எல்லாவற்றையும் அனுசரிக்கத்தான் முதல் படியாக இயேசு எருசலேமுக்குள் நுழைகிறார். இந்நிகழ்வுகள் யாவும் புனித காலத்தில் நடந்து முடிகிற அம்சங்களாகும். ஆகவே இந்த புனித வாரம் நிகழ்வுகள் அவரின் பயணத்தில் நமது வாழ்விற்கான சுவடுகளாக பதிந்திருக்கின்றன.

**பயணமே வாழ்க்கை :** வாழ்க்கை என்பது எப்போதுமே பயணத்தால் ஆனது. பிறப்பதற்கு முன்பிருந்து இறந்த பிறகு வரை நாம் ஒவ்வொருவரும் பயணம் செய்கிறோம். இப்பயணம் போராட்டத்தால் சூழ்ந்தது.

- இப்பயணத்தில் ஆதரிப்பவர்களைவிட எதிர்பார்ப்பவர்களே அதிகம்
- பாராட்டுபவர்களை விட விமர்சிப்பவர்கள் தான் அதிகம்
- அன்பு செய்பவர்களைவிட, பகைமையை வளர்ப்பவர்கள் தான் அதிகம்.
- சமாதானத்தை விட சண்டை மூட்டுபவர்கள் தான் அதிகம்
- உண்மைக்காக உழைக்காத ஏமாற்றி பிழைப்பவர்கள் தான் அதிகம்
- இயல்பாக இருப்பவர்களை விட நடிப்பவர்கள் தான் அதிகம்
- சேவை செய்பவரை விட அந்தப் பெயரில் சேர்த்து வைப்பவர்களே அதிகம்.

இதை ஒவ்வொரு கிறிஸ்தவனும், உணர்ந்து வாழ்ந்தால் இயேசு வாழ்ந்த இலட்சியப் பயணத்தை நாமும் தொடரலாம். பெரிய வெள்ளி இல்லாமல் உயிர்ப்பு ஞாயிறு இல்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை.

**இதைத்தான் குருத்து ஞாயிறு (புனித வாரம்) எடுத்துக் காட்டுகின்றது.**



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

## மோதலால் பாதிக்கப்பட்ட மியான்மாரில் ஒன்றிப்பு ஏற்பட அழைப்பு

உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் திருநீற்றுப் புதனைத் தொடங்கியுள்ள வேளை, ஆசியா முழுவதும் உள்ள இயேசு சபைத் தலைவர்கள், மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, குறிப்பாக மியான்மாரில், உறுதியான ஒன்றிப்புடன் இறைவேண்டல், நோன்பு மற்றும் தர்மத்தை ஒன்றிணைக்க விசுவாசிகளை வலியுறுத்தியுள்ளனர். "40 நாள் தவக்காலம் தொடங்குகையில், புலம்பெயர்ந்தோர், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஆதரவு மற்றும் அமைதியை ஆதரிப்பது உள்ளிட்ட இரக்கச் செயல்களை நோக்கி நமது நம்பிக்கை நகர வேண்டும்" என்று ஆசிய வட்டார இயேசு சபைத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## அரசியலமைப்பு விழுமியங்களைக் காக்க இந்திய ஆயர் பேரவை அழைப்பு

பெங்களூருவில் நடைபெற்ற 37வது பொதுக்குழு கூட்டத்தைத் தொடர்ந்து, இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை (CBCI) ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டது. நம்பிக்கையும் தேசமும்: இந்தியாவின் அரசியலமைப்புப் பார்வைக்குத் திருஅவையின் சாட்சி" என்பதே இக்கூட்டத்தின் மையப்பொருளாக அமைந்தது.இக்கூட்டத்தில், இன்றைய காலக்கட்டத்தில் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வு, சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மற்றும் அரசியல்

பிரிவினைகளுக்கு மத்தியில், கிறிஸ்தவர்கள் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை. நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் உடன் பிறந்த உறவை நிலைநிறுத்தும் இந்திய அரசியலமைப்பிற்குத் தங்களின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்திய ஆயர்கள், மேலும் அதிகரித்து வரும் பாகுபாடுகள், குறிப்பாக, தலித் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பாரபட்சம் குறித்துத் தங்களது கவலையை வெளிப்படுத்தினர்.மதச் சுதந்திரம் மற்றும் தனியுரிமையைச் சிதைக்கும் சட்டங்களுக்கு எதிராகத் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்த ஆயர்கள், மேலும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினர்.

## இந்தியாவில் கொல்கத்தா சலேசிய மாநிலத்தின் நூற்றாண்டு விழா

இத்தாலியில் 1859-இல் நிறுவப்பட்ட சலேசிய சபை, 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொல்கத்தாவை மையமாக வைத்து இந்தியாவில் தனது பணிகளைத் தொடங்கியது. கல்வியின் மூலம் இளைஞர்களை மேம்படுத்துவதற்கான புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டுடன் இந்தியாவில் தொன் போஸ்கோ சலேசியர்களின் மூன்று கால நூற்றாண்டு விழா பிப்ரவரி 8ம் தேதியுடன் இனிதே நிறைவுற்றது.கொல்கத்தாவில் நடைபெற்ற இந்த நிறைவு விழாவில், இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்திருந்த திருஅவைத் தலைவர்கள், பல்வேறு துறவற சபைகளின் தலைவர்கள் மற்றும் பொதுநிலை உடனுழைப்பாளர்கள் உட்பட ஏறத்தாழ 2,000 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் சமூகப் புறக்கணிப்பிலிருந்து மீள உதவிய ஒரு நூற்றாண்டு கால சேவைக்காக இந்திய சலேசியர்களை அதிபர் தந்தை பாபியோ அவர்கள் பாராட்டி மகிழ்ந்தார்.எதிர்காலத்தை நோக்குகையில், பொதுநிலை உடனுழைப்பாளர்களுடனான (lay collaborators) கூட்டாண்மையை வலுப்படுத்தவும், உள்ளூர் கல்வித் தேவைகளைக் கண்டறியவும், தொன் போஸ்கோவின் தடுப்பு முறையை (preventive system) தொடர்ந்து செயல்படுத்தவும் இச்சபை திட்டமிட்டுள்ளது. இம்முறை கல்வியில் பரிவு, தெளிந்து தேர்தல், ஆன்மிகம் மற்றும் கனிவுடன் கூடிய அன்பை வலியுறுத்துகிறது.

## மனித வர்த்தகத்திற்கு எதிராக பிலிப்பீன்ஸ் ஆயர்கள்

வலுக்குறைந்த மக்களைப் பாதுகாப்பதில் திருஅவையின் தார்மீக மற்றும் சமூக உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், தலத்திருஅவை-அரசு ஒத்துழைப்பு மற்றும் நாடு முழுவதும் மறைமாவட்ட மனித வர்த்தக எதிர்ப்புக் குழுக்களை உருவாக்குதல் அல்லது வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். "சட்டவிரோத

ஆள்சேர்ப்பு மற்றும் கட்டாய உழைப்பு முதல் பாலியல் சுரண்டல் மற்றும் குழந்தைகளை இணைய வழி முறைகேடுகளில் ஈடுபடுத்துவது வரை மனித வர்த்தகம் பரவலாக உள்ளது" என்றும், "குறிப்பாக, மெட்ரோ மணிலா போன்ற நகர்ப்புறங்களில் இது பரவலாக உள்ளது" என்றும் ஆயர்கள் எச்சரித்துள்ளனர்."வயது வந்த பெண்களும், வயது வராத சிறுமிகளுமே பொதுவாக அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள்" என்றும், "ஏமாற்றும் இணையவழி ஆள்சேர்ப்பு மூலம் எண்மமுறை (டிஜிட்டல்) தளங்கள் கடத்தலை எளிதாக்கியுள்ளன" என்றும் குறிப்பிட்டுள்ள ஆயர்கள், வறுமை, கல்வியின்மை, மோதல்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகள் ஆகியவை பாதிப்பை அதிகரிக்கும் முக்கிய காரணிகளாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

## ஒரே குடும்ப உணர்வு என்ற உங்களின் தனிவரத்தைக் கடைபிடியுங்கள்

திருத்தந்தை தனது உரையில், இரு துறவு சபைகளின் பகிரப்பட்ட மறைபரப்புப் பணிக்கான இறையழைத்தலை எடுத்துரைத்ததுடன், ஒதுக்கப்பட்டவர்களுக்கு நற்செய்தி அறிவிப்பதற்கும், தேவையில் இருப்போருக்குப் பணியாற்றுவதற்கும் அவர்களிடம் இருக்க வேண்டிய உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். "அர்ப்பண வாழ்விற்கு அழைக்கப்பட்ட இருபால் துறவியர் மற்றும் அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ பொதுநிலையினருக்கு ஒரே குடும்ப உணர்வு என்பது முக்கியமாக கடவுளுடனான அவர்களின் உறவு, திருநற்கருணை, இறைவேண்டல் மற்றும் வழிபாடு, இறைவார்த்தையைக் கேட்பது மற்றும் அருளடையாளங்களைக் கொண்டாடுவது ஆகியவற்றிலிருந்து வருகிறது" என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ. அமலமரி அர்ப்பணத் துறவு சபையினர் தங்கள் விதிகள் மற்றும் அமைப்புவிதித் தொகுப்பு அங்கீகரிக்கப்பட்டதன் 200-வது ஆண்டு நிறைவையும், திருத்தூதர்களின் அன்னை சபையின் அருள்சகோதரிகள் தங்கள் நிறுவுநரின் 150-வது ஆண்டு நிறைவையும் கொண்டாடும் வேளை பிப்ரவரி 21, சனிக்கிழமையன்று, அவர்களைத் திருப்பீடத்தில் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார் திருத்தந்தை.

## பணியாற்றுவது மட்டுமல்ல மற்றவர்களுடன் இணைந்து பயணியுங்கள்

"இத்தாலியின் இரக்கச் சங்கம்" என்ற கூட்டமைப்பின் உறுப்பினர்களின் பிறரன்புப் பணிகளை, குறிப்பாக நோயாளர்கள், முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான அவர்களின் அர்ப்பணிப்பைப் பாராட்டிய திருத்தந்தை, "உங்களின் நோக்கம் மற்றவர்களுக்காகப் பணியாற்றுவது மட்டுமல்ல, மாறாக மற்றவர்களுடன் ஒன்றித்துப் பயணிப்பது" என்று எடுத்துக்காட்டினார். இரத்தம் மற்றும் உடல் உறுப்பு தானம் முதல் குழந்தைகளின் வளர்ச்சிக்கான முயற்சிகளை ஆதரிப்பது வரை, அவ்வமைப்பின் தகவமைப்புத் திறனையும் கண்டு மகிழ்ந்தார் திருத்தந்தை..

# சுடர் வாசகர் போட்டி 131

## சரியான விடைகள்

1. 1875 ஜூன் 16ல்
2. இயேசுவின் நண்பர்களாகவும், மற்றவர்களுக்கு ஒளியாகவும் மாற்றுகிறது.
3. "மறைநூல் அறிஞரும், பரிசேயரும்"
4. புனித வெர்சீலியா
5. புனித கொலாஸ்திகா மற்றும் புனித ஆசிர்வாதப்பர்
6. துறவு மேற்கொள்ள அழைப்பு
7. பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவதுபோல் ஒவ்வொருவரும் நெருப்பால்
8. புனித பீட்டர் தமியான்
9. பொதுத்தீர்வைப் படத்தை வரைந்து அதன் பொருளை அரசனுக்கு விளக்கினார்.
10. யூசேபியா பாலோமினா ஏனெஸ்
11. சிறுமி பெர்னதெத் சௌபிரிஸ்க்கு
12. தொழுநோயாளிகளோடு
13. "வல்லுநர்"
14. மோசேயிடம்
15. 1233ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள்



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. A. Antony Stephen, Bangalore
Ms. Jenifer, Chennai
Mr. Francis Paulraj, Dharmapuri

# சுடர்
## வாசகர் போட்டி
## 132

1. கடவுளின் திட்டத்தில் யோசேப்பு மிகுந்த முக்கியத்துவம் பெற்றவர் என்பது யாருடைய ஒப்புதல்?
2. "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது" என்று கூறியது யார்?
3. சிறுவயதிலேயே ஒரு நாட்டை தலைமைத் தாங்கி வழிநடத்தக்கூடிய திறமையை இறைவன் யாருக்கு கொடுத்திருந்தார்?
4. புனித யோசேப்புக்கு வானதூதர் கனவில் தோன்றி கன்னிமரியாவைப் பற்றி என்னக் கூறினார்?
5. அடிமை நிலையிலிருந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதே எனது பணி என்று கூறியது யார்?
6. நம் வாழ்வு எவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் நம் வாழ்க்கை மாறும்?
7. குழந்தை இயேசு மருத்துவமனையின் தலைவர் பெயரென்ன?
8. புனித யோசேப்பு எந்த வயதில், கற்பின் வாக்குறுதியை ஏற்று கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்தார்?
9. கடவுளின் முத்திரையிடப்பட்டவர்கள் எவ்வாறு இருந்தனர் என்று திருவெளிப்பாடு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.?
10. புனித பேட்ரிக்கின் நண்பர்கள் பெயரென்ன?
11. தவக்காலம் மனமாற்றத்தின் காலம்" என்ற தலைப்பில் திருத்தந்தை வழங்கிய செய்தியென்ன?
12. புனித யோவான் நற்செய்தியில் 11:25ல் என்னக் கூறுகிறார்?
13. "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" என எந்த நற்செய்தி, அதிகாரத்தில் உள்ளது?
14. "மரணத்தை கடந்து மாண்பை மீட்டெடுக்கும் அன்பை அவை வெளிப்படுத்துகின்றன" என்று எடுத்துரைத்தவர் யார்?.
15. பல பெண்களை ஒன்றாய் திரட்டி உருவாக்கிய சபையின் பெயரென்ன?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிக்காட்டி

ஆண்டவரின் இரவு விருந்து
ஆண்டவரின் பாடுகளின் வெள்ளி
புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு
ஆண்டவரின் உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு
இறை இரக்கத்தின் ஞாயிறு
பாஸ்கா காலத்தின் 3ம் ஞாயிறு
புனித ஆன்சல்ம் ஆயர்
புனித ஜார்ஜ் புனித அடால்பெர்ட்
சிக்மரிங்கன் நகர்ப் புனித பிதேலிஸ்
புனித மாற்கு நற்செய்தியாளர் விழா
இறையழைத்தல் ஞாயிறு
புனித பீட்டர் ஷானல் மற்றும்
மான்போர்ட் நகர்ப் புனித லூயிஸ் மரிய கிரிஞ்ஞோன்
சியென்னா நகர்ப் புனித கத்ரீன்
புனித ஐந்தாம் பயஸ்

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

வாழ்வை மாற்றும் புனித வாரம்
உயிர்ப்பின் மக்களாய் வாழ்வோம்
புனித மாற்கு - வாழ்வு தரும் பாடம்
திருஅவையின் செய்திகள்

# மார்ச் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| **01** | ஞா | **தவக்காலம் இரண்டாம் ஞாயிறு** | **I. தொ.நூ. 12: 1-42**<br>**II. திமொ. 1: 8-10** | மத். 17: 1-9 |
| 02 | தி | | தானி. 9: 4-11 | லூக். 6: 36-38 |
| 03 | செ | | எசா. 1: 10,16-20 | மத். 23: 1-12 |
| 04 | பு | புனித கசிமீர | எரே. 18: 18-20 | மத். 23: 1-12 |
| 05 | வி | | எரே. 17: 5-10 | லூக். 16: 19-31 |
| 06 | வெ | | தொ.நூ. 37: 3-4, 12-13, 17-28 | மத். 21: 33-34, 45-46 |
| 07 | ச | புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி | மீக். 7: 14-15, 18-20 | லூக். 15: 1-3, 11-32 |
| **08** | ஞா | **தவக்காலம் மூன்றாம் ஞாயிறு** | **I. விப. 17: 3-7**<br>**II. உரோ. 5: 1-2, 5-8** | **யோவா. 4: 5-42** |
| 09 | தி | உரோமை நகர்ப் புனித பிரான்செஸ் | 2அர. 5: 1-15 | லூக். 4: 24-30 |
| 10 | செ | | தானி (இ) 1: 2, 11-19 | மத். 5: 17-19 |
| 11 | பு | | இச. 4: 1.5-9 | மத். 5: 17-19 |
| 12 | வி | | எரே. 7: 23-28 | லூக். 11: 14-23 |
| 13 | வெ | | ஓசே. 14: 1-9 | மாற்கு 12: 28-34 |
| 14 | ச | | ஓசே. 6: 1-6 | லூக். 18: 9-14 |
| **15** | ஞா | **தவக்காலம் நான்காம் ஞாயிறு** | **I. 1சாமு. 16: 1, 16-7, 10-13**<br>**II. எபே. 5: 8-14** | **யோவா. 9: 1-41** |
| 16 | தி | | எசே. 65: 17-21 | யோவா. 4: 43-54 |
| 17 | செ | புனித பேட்ரிக் | எசே. 47: 1-9, 12 | யோவா. 5: 1-3,5-16 |
| 18 | பு | | எசே. 49: 8-15 | யோவா. 5: 17-30 |
| 19 | வி | புனித யோசேப்பு: புனித கன்னிமரியாவின் கணவர் பெருவிழா | **I. 2சாமு. 7: 4-5, 12-14,16**<br>**II. உரோ. 4: 13, 16-18,22** | மத். 1: 16, 18-21,24 |
| 20 | வெ | | சாஞா. 2: 1,12-22 | யோவா. 7: 1,2,10,15-30 |
| 21 | ச | | எரே. 11: 18-20 | யோவா. 7: 40-53 |
| **22** | ஞா | **தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு** | **I. எசே. 37: 12-14**<br>**II. உரோ. 8: 8-11** | **யோவா. 11: 1-45** |
| 23 | தி | | தானி. 2: 1-9, 15-17, 19-30, 33-62 | யோவா. 8: 1-11 |
| 24 | செ | | எண்.21: 4-9 | யோவா. 8: 21-30 |
| 25 | பு | **ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு பெருவிழா** | **I. எசா. 7: 10-14,8:10**<br>**II. எபி. 10: 4-10** | லூக். 1: 26-38 |
| 26 | வி | | தொ.நூ. 17: 3-9 | யோவா. 8: 51-59 |
| 27 | வெ | | எரே. 20: 10-13 | யோவா. 10: 31-42 |
| 28 | ச | | எசே. 37: 21-28 | யோவா. 11: 45-57 |
| **29** | ஞா | **ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு** | **I. எசா. 50: 4-7**<br>**II. பிலி. 2: 6-11** | **மத். 26: 14-27: 66** |
| 30 | தி | | எசா. 42: 1-7 | யோவா. 12: 1-11 |
| 31 | செ | | எசா. 49: 1-6 | யோவா. 13: 21-33, 36-36 |








*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**



TO SHARE THE LIGHT
தீபகம் தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
45 லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-10
வழங்கும்
தவக்காலத்திலே இறையேசுவின் பாடுகளை
இணைந்து சிந்திக்க ஒரு முயற்சி
குற்றம்
(களங்கம்)
தவக்கால சிறப்பு ஒலி-ஒளி நிகழ்ச்சி
தொலைப்பேசி : 9385201453